**SG1**

# சிங்கப்பூர்க் கதைகள்: கலைத்துறைப்  பாதைகளும் திசைத்திருப்பமும்

இக் கண்காட்சி  கதை சொல்லும். கலைஞர் பயணங்களால் அது கட்டப்பட்டது. சிங்கப்பூரிலும்  அப்பாலும்  சமூக நிலைமைகளை, 19ஆம் நூற்றாண்டு கலை வழி புரிந்துகொள்ள, அவர்கள் முற்பட்டனர்.சிங்கப்பூர்க் கலை வரலாற்றில்  எழுதப்பட்டவை, தவிர்க்கப்பட்டவையை  மறுபரிசீலனை செய்ய, இந்தக் கண்காட்சி, நம் பன்முகத்தன்மை,  உலகப் பிரசித்தி பெற்ற அடையாளத்தை அங்கீகரிக்கிறது.

கலைஞர்கள், கலை நயமிக்க கேள்விகளை எவ்வாறு பரிசீலித்து, சமூக,

காலனித்துவ, நகர்ப்புற மாற்றம்  போன்றவற்றை,

ஊடகம், கருத்து வெளிப்பாடு மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

சிங்கப்பூர்ப் கலையின் விரிந்த பார்வையை உள்ளடக்கி,

பாலினம், வர்க்கம்  தொழிலாளர் பிரச்சினைகளை ஆராய வழி ஏற்படுத்துகின்றது. இந்தக் கண்காட்சி வழி, நாம் பயணிக்கும்போது, இந்த கண்காட்சிவழி நாம் பயணிக்கும்போது தோன்றுவது, இது யார் கதை? யார் தேடுகிறார்கள்? கலை என்பது எதற்காக?

**SG1**

**வெப்பமண்டலச் சந்தை**

19 ஆம் நூற்றாண்டில், சிங்கப்பூரை, 1819இல்,பிரிட்டிஷ் காலனித்துவ அமைப்பால் வர்த்தக நிலையமாக நிறுவப்பட்டதால், அது, வாய்ப்புகள் நிறைந்த நாடாகக் கருதப்பட்டு, வணிகர்கள், தொழிலாளர்கள், பொருளீட்ட, இங்குப் பயணம் செய்தனர். அச்சிடப்பட்டக் காட்சி விளக்கங்கள்,
ஓவியங்கள், புகைப்படங்களில் சிங்கப்பூரின் பொருளாதார நிலைத்தன்மை வலியுறுத்தியுறுத்தப்பட்டிருந்தது.. அதே நேரத்தில், இந்தச் சித்தரிப்புகள், இந்தத் தீவை, கவர்ச்சிமிகு, மந்தமான மீன்பிடி கிராமமாகக் கருத வைத்தன. . அந்த ஆரம்பக்காலப் பதிவுகள், பல தலைமுறைகளாக இங்கு வாழ்ந்த பல்வேறு சமூகத்தாரிடமும், மனங்கவர் கிறக்கத்தை ஏற்படுத்தின.

இந்தக் காலனித்துவப் பார்வை, சிங்கப்பூரைச் சித்தரித்த விதத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்தபோதும்,, கலைப் பரிமாற்றத்தின் ஆரம்பக்கால கலைநயமிக்க எடுத்துக்காட்டுகள், கற்பனை செய்யப்பட்டசிங்கப்பூர் பற்றி, அனுபவபூர்வமான பார்வையை வழங்குகின்றன.

ஜான் டர்ன்பல் தாம்சன்
(*பிறப்பு*. 1821, ஐக்கிய இராச்சியம்; *இறப்பு*. 1884, நியூசிலாந்து)
ஸ்காண்டல் பாயிண்டிலிருந்து எஸ்ப்ளனேட்
1851
கித்தானில் எண்ணெய்
திருவாட்டி F. G. ஹால்-ஜோன்ஸ்
சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத் திரட்டு
HP-0054

இந்த நெரிசலான பொதுச் சதுக்கம் படாங் (மலாய் மொழியில் "புலம்" ) என்று அழைக்கப்படுகிறது. இது சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்திற்கு வெளியே அமைந்துள்ளது,
இது சிங்கப்பூரின் அசல் கடற்கரையோரத்தை எல்லையாகக் கொண்டிருந்தது. ஒரு சிறிய புல் மலை, அங்கு சமூகத்தாருடன் நட்புறவாடுதலும் கிசுகிசுத்தலும் அடிக்கடி நடைபெற்றது என ஜான் டர்ன்புல் தாம்சன் ஸ்கேண்டல் பாயிண்டைக் குறிப்பிடுகிறார் -.

சிங்கப்பூரின் முதல் அரசாங்க *நில* அளவீட்டாளராக (1841–1853), காலனித்துவக் கட்டுப்பாட்டாளர்களுக்கு *நில* அறிவை அளிக்க வரைபடங்களையும் தாம்சன் தயாரித்தார். ஓவியத்தின் ஒழுங்கான தளவமைப்பு, முக்கியக் காலனித்துவ கட்டடங்கள் மற்றும் தனித்துவமான இன மற்றும் மரபினக் குழுக்களின் பட்டியல்

**SG1**

| |
|---|
| ஆகியவை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய*த்தின்* சிறந்த படத்தை வழங்குகின்றன. |
| இடதுபுறம், நடுவில்<br>ஓவியர் பெயர் தெரியவில்லை<br>சின் ஹெங் & கோ. அன்னாசித் தொழிற்சாலை<br>1938<br>அஞ்சல் அட்டை<br><br>இடதுபுறம், கீழே<br>அடோல்ஃப் வில்லெட்<br>(*பிறப்பு* 1857, பிரான்ஸ்; *இறப்பு* 1926, பிரான்ஸ்)<br>*Le Meilleur des Ananas de Singapore,*<br>*Marque Opter*<br>(சிங்கப்பூரிலிருந்து சிறந்த அன்னாசி, "ஆப்டர்" விற்பெயர்)<br>1890 களில் வரையப்பட்டது<br>அஞ்சல் அட்டை<br><br>இடதுபுறம், மேலே<br>G. R. லாம்பர்ட் & கோ.<br>(செயல்பட்ட காலம் 1867–1890 கள், சிங்கப்பூர்)<br>அன்னாசித் தோட்டம்<br>1890<br>அஞ்சல் அட்டை<br><br>இடது<br>எட்கர் அயின்ஸ்வொர்த்<br>(*பிறப்பு* 1905, *இடம்* தெரியவில்லை; *இறப்பு* 1975, ஐக்கிய இராச்சியம்)<br>பேரரசுச் சந்தைப்படுத்தல் வாரியச் சுவரொட்டி:<br>வெப்பமண்டலங்களின் சந்தைத் தோட்டம்—மலேய அன்னாசி<br>1931<br>கல்லச்சுக்கலை<br><br>வலது<br>ஓவியர் பெயர் தெரியவில்லை<br>பேரரசுச் சந்தைப்படுத்தல் வாரியச் சுவரொட்டி: தகரப்பெட்டிகளில் சிங்கப்பூர் அன்னாசிகளை வாங்கவும்<br>20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நடுப்பகுதி வரை<br>கல்லச்சுக்கலை<br><br>மேல் வலது<br>ஓவியர் பெயர் தெரியவில்லை |

**SG1**

| |
|---|
| அன்னாசி, அன்னாசி (Ananas comosus) வில்லியம் ஃபார்கூஹரின் இயற்கை வரலாற்று வரைபடங்களின் திரட்டிலிருந்து<br>*வரையப்பட்ட காலம்* 1803–1818<br>காகிதத்தில் நீர்வண்ணம்<br>திரு. ஜி. கே. கோஹ் அவர்களின் பரிசு<br><br>கீழ் வலது<br>ஓவியர் பெயர் தெரியவில்லை<br>அன்னாசி, அன்னாசி (Ananas comosus) வில்லியம் ஃபார்கூஹரின் இயற்கை வரலாற்று வரைபடங்களின் திரட்டிலிருந்து<br>*வரையப்பட்ட காலம்* 1803–1818<br>காகிதத்தில் நீர்வண்ணம்<br>திரு. ஜி. கே. கோஹ் அவர்களின் பரிசு<br>சிங்கப்பூர் தேசிய அருங்காட்சியகத்தின் திரட்டு<br>2008-05815 \| 2011-02818 \|1995-03510 \|<br>2017-00872 \| 2014-00118 \| 1995-03136 \|<br>1995-03138<br><br>19 ஆம் நூற்றாண்டு முழுவதும் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இது போன்ற காட்சி பிரதிநிதித்துவங்கள் சிங்கப்பூரை ஒரு கவர்ச்சியான முனையமாக சித்தரித்தன. இந்தச் செயல்முறை நீரிணைக் குடியேற்றப் பகுதிகளின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை முறையாக பட்டியலிடுவதற்கான முயற்சிகளுடன் தொடங்கியது. விவரமான விளக்கப்படங்களை உருவாக்க உள்ளூர் ஓவியர்கள் நியமிக்கப்பட்டனர், *இன்றுவரை அவர்தம் அடையாளங்கள் அறியப்படவில்லை*, பின்னர் அவை வில்லியம் ஃபர்குஹார்ஸ் (மலக்கா வாசி, 1803-1818) அவர்களுடைய தொகுப்புகளில் தொகுக்கப்பட்டன. 1920 களில், *பேரரசுச் சந்தைப்படுத்தல் வாரியம்* (எம்பயர் மார்க்கெட்டிங் போர்டு) (1926 இல் நிறுவப்பட்டது) கவர்ச்சிகரமான சுவரொட்டிகளை வடிவமைக்க ஐரோப்பியக் கலைஞர்களை நியமித்தது, அதே நேரத்தில் தோட்டங்கள் மற்றும் தொழில்துறை வளர்ச்சியின் அஞ்சல் அட்டைகள் பிரபலமான நினைவுப் பரிசுகளாக மாறின. |
| 'ஜி.ஆர். லாம்பர்ட் & கோ'வின் புகைப்படங்கள் கொண்டு வரையப்பட்ட விளக்கப்படம் கொண்ட அஞ்சல் எழுதுதாள் அட்டைகள்.<br>1890 களில்<br>ஹொங் டக் குன் *அவர்களின்* திரட்டு<br><br>முன்-செலுத்து அஞ்சல் கட்டணத்துடன் விற்கப்பட்டதால், அஞ்சல்தலை ஒட்டும் தேவைகள் இல்லாத அஞ்சல் எழுதுதாள் அட்டைகள் 1870 களில் தகவல்தொடர்புக்கான வசதியான வடிவமாக வெளிவந்தன. சிங்கப்பூர் ஓர் அமைதியான சொர்க்கம் மற்றும் |

**SG1**

| |
|---|
| பரபரப்பான துறைமுகம் என்ற பிரபலமான தோற்றத்தை வலுப்படுத்தி, பரப்ப, இந்த அட்டைகள் அழகிய கிராமப்புற அல்லது நதி காட்சிகளைக் கொண்ட விளக்கப்படங்களைக் கொண்டிருந்தன. அவற்றில் சில புகைப்படங்களை மீளுருவாக்கம் செய்து வரையப்பட்டவை, பெரும்பாலும் அவை 'ஜி.ஆர். லாம்பர்ட்டின் புகைப்படப் படைப்பகத்துக்குரியவை. |
| மரியான் ஜேம்ஸ் (பிறப்புக்குடிப் பெயர் ரீவ்ஸ்)<br>(பிறப்பு ஆண்டு அறியப்படவில்லை, ஐக்கிய இராச்சியம்; *இறப்பு* 1842, ஐக்கிய இராச்சியம்)<br>அரசு மலையிலிருந்து பார்க்கும் காட்சி<br>1828<br>காகிதத்தில் நீர் நீர்வண்ணம்<br>சிங்கப்பூர் தேசிய அருங்காட்சியகத்தின் தொகுப்பு<br>1992-00199<br><br>ஒரு திறமையான பயிற்சி நீர்வண்ண ஓவியர்,<br>மரியான் ஜேம்ஸ் (பிறப்புக்குடிப் பெயர் ரீவ்ஸ்) தனது கணவர் ஓர் ஆயராகப் பணியாற்றிய கல்கத்தாவிலிருந்து பிரிட்டனுக்குத் திரும்பும் பயணத்தின் போது சிங்கப்பூரின் இந்தக் காட்சியை வரைந்தார். அவரது நீர் வண்ண ஓவியங்கள் பிரபலமான சித்தரிப்புகளுக்கு இணங்க, விறுவிறுப்பான துறைமுக நகரத்தின் காதல் ததும்புகிற, அழகிய காட்சியை வழங்குகின்றன காலனிகளின். ஜேம்ஸ் தனது பயணங்களில் இருந்து வரையப்பட்ட கலைப்படைப்புகளின் படக்கோவையைத் தயாரித்தார், இஃது அவரது காலத்தில் ஒரு பெண் செய்த குறிப்பிடத்தக்க அருஞ்செயல் ஆகும். |

**SG1**

## நகரும்  உருவங்கள்

1890 களின் பிற்பகுதியில் சிங்கப்பூரில் முதன்முதாலக வெளிநாட்டுத் திரைப்படங்கள்   திரையிடப்பட்டாலும், 1930 களில்தான், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட படங்கள், கூடுதலாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இந்த நடைமுறை, சிங்கப்பூரின் தார்மீகப் போராட்டங்கள், அடையாளத்திற்கான தேடல், அன்றாட வாழ்க்கையின் நாடகம் தொடர்புடையவற்றைச்  சித்தரித்தன. அது திரைப்படப்  பொழுதுபோக்கினை செல்வாக்குமிக்கதாகவும்,  , கலாச்சார வெளிப்பாட்டின்  முக்கிய வடிவமாகவும் மாற்றிற்று. திரைப்படத் தயாரிப்பின் காட்சிக் கூறுகள் – அரங்க வடிவமைப்பு, விளம்பரச் சுவரொட்டிகள், திரைப்படத் தலைப்புகள், கட்டமைப்பு - இசை இணைப்பு எனப்  பார்வையாளர்களிடம் பரிமாறிக்கொள்ளக்கூடிய கதைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது.

*பி. என்* ராவ்
(*பிறப்பு* 1908, இந்தியா; *இறப்பு* 1998, இந்தியா)
லைலா மஜ்னுவின் பகுதிகள்
1962
திரைப்படம், 35 மிமீ, தரமானவரையறை கொண்ட காணொளி, ஒற்றை ஒளிவழி, 4: 3 காட்சிநிலைவிகிதம், கறுப்பு மற்றும் வெள்ளை மற்றும் ஒலி (மோனோ), 13 நிமிடம் 23 விநாடிகள்,
சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டது,
மலாய் மொழியில் ஆங்கில வசன வரிகளுடன்
© காத்தே-கேரிஸ் பிலிம்ஸ் பிரைவேட்*லிமிடெட் நிறுவனத்தால் அனுமதிக்கப்படுகிறது.*
ஆதாரம்: ஆசிய திரைப்படக் காப்பகம்
இந்தத் தொகுப்பு தொடர்ச்சியான சுழற்சியில் காட்டப்பட்டுள்ளது.

லைலா மஜ்னு
சமுதாய எதிர்பார்ப்புகளை மீறி ஒன்றுசேரும் இரண்டு காதலர்களைப் பற்றிய பிரபலமான அரபு-பாரசீகக் கதை. இது மார்ச் 27, 1934 அன்று கடற்கரைச் சாலையில் உள்ள மார்ல்போரோ திரையரங்கில் திரையிடப்பட்ட பிரபல இந்திய இயக்குனர் பி.எஸ். *ராஜன் அவர்களின்* ‘லைலா மஜ்னு’வின் மறு-உருவாக்கம் ஆகும் , உள்ளூரில் தயாரிக்கப்பட்ட முதல் மலாய் மொழித் திரைப்படமாக *இது* பொதுவாக நம்பப்படுகிறது. துரதிருஷ்டவசமாக, இப்பகுதியின் பல ஆரம்பகாலப் படங்களைப் போலவே, இஃது இப்போது எந்தவொரு பிரதிகளும் இல்லாமல் அழிந்துவிட்டதாகக் கருதப்படுகிறது,.

**SG1**

| |
|---|
| *பி. என்.*ராவின் 1962 *ஆம் ஆண்டின்* பதிப்பு அவரது ஆடம்பரமான காட்சிப் பாணியை முன்வைக்கிறது, இது போலியான அரபுப் படப்பிடிப்பு அரங்கம் மற்றும் நடனங்களை இந்தியத் தாக்கங்களுடன் கலக்கிறது. மலாய்ப் பாடல்களின் ஒலிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் பலபண்பாட்டு ஆதாரக்கண்ணாடிவழியாகக் கண்டறிகையில் உலகளாவிய கலாச்சாரத்திற்கான தேவை இருப்பதாகப் *பல்வேறு வகை* கலாச்சார ஆதாரங்களின் ஒருங்கிணைப்பு கூறுகிறது. |
| பி. ராம்லி<br>(*பிறப்பு* 1929, மலேசியா; *இறப்பு* 1973, மலேசியா) பெனரெக் பெச்சா-வின் (மூன்று சக்கர வண்டி இழுப்பவர்) ஒரு பகுதி<br>1955<br>8 நிமிடம் 53 வினாடிகள்<br><br>‘பெண்டேகர் புஜாங் லாபோக்’கிலிருந்து (இளவட்ட வீரர்கள்) இரண்டு பகுதிகள்<br>1959<br>4 நிமிடம் 15 வினாடிகள் மற்றும் 6 நிமிடம் 11 வினாடிகள்<br><br>‘இபு மெர்த்துவா-க’விலிருந்து (என் மாமியார்) ஒரு பகுதி<br>1962<br>14 நிமிடம் 54 வினாடிகள்<br>‘மது திகா’விலிருந்து (மூன்று மனைவிகள்) ஒரு பகுதி<br>1964<br>15 நிமிடம் 49 வினாடிகள்<br>ஷா நிறுவனத்தின் அனுமதியுடன் *பயன்படுத்தப்படுகிறது*<br><br>அனைத்துப் படங்களும்: தரமான வரையறை கொண்ட காணொளி, ஒற்றை- *ஒளிவழி*, 5: 4 காட்சிநிலை விகிதம், கறுப்பு மற்றும் வெள்ளை மற்றும் ஒலி (ஸ்டீரியோ). சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டது. மலாய் மொழியில், ஆங்கில வசன வரிகளுடன், பெனரெக் பெச்சா *மட்டும்* மலாய் மற்றும் ஆங்கிலத்தில் ஆங்கில வசன வரிகளுடன் உள்ளது. இந்த 55 நிமிடத் தொகுப்பு ஒவ்வொரு மணி நேரமும் மீண்டும் மீண்டும் ஓடுகிறது.<br><br>பி. ராம்லி ஒரு நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர், மலேசியா மற்றும் சிங்கப்பூரில் பொழுதுபோக்குத் துறையில் ஒரு அழியாத அடையாளத்தை விட்டுச் சென்ற பாடகர் மற்றும் பாடலாசிரியர் ஆவார். பல திறமைகள் கொண்ட கலைஞர் மலாய் திரைப்படத்துறைக்குக்குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கினார். 60 க்கும் மேற்பட்ட படங்களை இயக்கி நடித்த அவர், நகைச்சுவை முதல் இசை நாடகம் வரை பல்வேறு வகைகளில் தனது பல்துறைத்திறனுக்காகப் பரவலான பாராட்டுக்களைப் பெற்றார். இவரது மிகவும் பிரபலமான *திரைப்* படங்களில் புஜாங் லாபோக் (1957) |

| |
|---|
| மற்றும் இபு மெர்டுவா-கு (1962) ஆகியவை அடங்கும். இவர் 250 க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார், அவற்றில் பல அவரது திரைப்படங்களில் இடம்பெற்றன மற்றும் மலாய் இசைப் பட்டியலில் உன்னதமாக நிலைத்தன. அன்றாட வாழ்க்கை, நகைச்சுவை மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்த அவரது கதைகள் மூலம் ராம்லீ பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் தென்கிழக்கு ஆசியாவில் அவரை ஓர் அடையாளமாக உயர்த்தியது. |
| ஓவியர்கள் பெயர் அறியப்படவில்லை<br>பெர்டோசா (பாவி) படத்தின் சுவரொட்டி; பெண்டேகர் புஜாங் லாபோக் (இளவட்ட வீரர்கள்) படத்தின் சுவரொட்டி<br>1951; 1959<br>கல்லச்சுக்கலை<br>சிங்கப்பூர் தேசிய அருங்காட்சியகத்தின் திரட்டு<br>1996-00654\| 1996-00653<br><br>பெரிய அளவிலான புகைப்பட அச்சிடுதல் மிகவும்விலை உயர்ந்ததாகவும், நேரத்தை எடுத்துக்கொள்ளும் ஒன்றாகவும்இருந்தபோது, கையால் வரையப்பட்ட சுவரொட்டிகள் திரைப்படங்களை விளம்பரப்படுத்துவதற்கான முதன்மை வழிமுறையாக இருந்தன. மிகைப்படுத்தப்பட்ட முகபாவனைகள், சண்டைநிறைந்த காட்சிகள், விரிவான படப்பிடிப்பக வடிவமைப்புக்குறிப்புகள் ஆகியவற்றுடன், ஒவ்வொரு படத்தின் சாரத்தையும் அவர்கள் வரைவில் கொண்டுவந்தனர், அதே நேரத்தில் பொதுமக்களையும் ஈர்த்தனர். திரைப்படங்கள்சமூக மையங்களில் முக்கியப் பங்கு வகித்த இடங்களில், இந்தச் சுவரொட்டிகளும் நகர்ப்புற நிலப்பரப்பின் ஒரு பகுதியாக மாறின. |

**SG1**

## சமூகமும் தாமும்

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சிங்கப்பூர்ச் சமூகங்கள், தனிநபர்களைப் பிரிதிநிதிக்க, புதிய வழிமுறைகள் ஏற்பட்டன.. உள்ளூர்க் கலைஞர்கள், ஓவிய, புகைப்படக் கூறுகளை இணைத்து, உருவப்படங்களை உருவாக்கி, சாதாரண மக்கள் முதல், முக்கியப் பிரமுகர்கள் வரை, எல்லாத் தரப்பினரையும் கவர்ந்தனர். . அந்தப் படங்கள், சுய அறிமுகம், ஞாபகார்த்தத் தேவைக்குரியவையாக விரைவில் பிரபலமாயின.. அதே நேரத்தில், உலகெங்கிலுமிருந்த கலைஞர்கள் சிங்கப்பூரால் கவரப்பட்டனர். பலர் கலைகளைக் கற்பிக்கவும், தீவின் மாறுபட்ட சமூகங்களைப் பிரதிபலிக்கும், பொது இடச் செயலகங்களை உருவாக்கவும் இங்கு வந்தனர்.

1930 களில், முழு நீளத் திரைப்பட இயக்குநர்கள், திரைப்பட அரங்க ஜோடனையளகார்கள், வரைபட வடிவமைப்பாளர்கள், நடிகர்கள், இசைக்கலைஞர்கள் ஆகியோரின் வருகை, இங்கிருந்த சமூகங்களைப் பற்றிய கதைகளைச் சொல்ல, ஒன்றாகக் கூடிய மற்றொர் உற்சாகமான இடமாக சிங்கப்பூர் மாறிற்று.. இந்தக் காலக்கட்டத்தில், சிங்கப்பூரின் வளமான கலாச்சாரத்தைப், பல வகை உரை, கையெழுத்துக் கலை வடிவமைப்புக் கலை முதலியன வளப்படுத்தின. இவ்வகை கலாச்சார வெளிப்பாடுகள், கண்ணோட்டங்கள், கலாச்சார வெளிபாடுகள் முதலியன அனைத்தும், பல அம்சங்கள் கொண்ட துடிப்பான கலைக்காட்சியை இங்கு உருவாக்கின.

லோ குவே சாங் (刘溪松)
(*பிறப்பு* 1889, சிங்கப்பூர்; *இறப்பு* 1982, சிங்கப்பூர்)

இரண்டு நாய்களுடன் ஒரு தம்பதியரின் உருவப்படம்
இருபதாம் நூற்றாண்டு
புகைப்படத்தில் எண்ணெய் மற்றும் வண்ணப்பசை

ஒரு பெண்ணின் ஓவியம்
இருபதாம் நூற்றாண்டு
கித்தானில் வண்ணப்பசை
பெரனகன் அருங்காட்சியகத்தின் *திரட்டு*
ஹால் ஆஃப் பீனிக்ஸ் மற்றும் பியோனி- *யின்*பரிசு
2018-00365| 2018-00344

சுல்தான் தனது அறைகளில்
*வரையப்பட்ட ஆண்டு* 1930 கள்

**SG1**

*ஜெலட்டின் வெள்ளி* அச்சுக் காகிதத்தில் எண்ணெய் மற்றும் வண்ணப்பசை
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2020-00350

இந்தக் குழுவின் முதல் கலைப்படைப்பில், இரண்டு நாய்களுடன் *இருக்கும்* ஒரு தம்பதியரின் உருவப்படம் சுயப் பிரதிநிதித்துவம் *பற்றிய* விழிப்புணர்வைப் பிரதிபலிக்கிறது மற்றும் சாதாரண, நிதானமான உருவப்படப் பாணிக்கான விருப்பம் வளர்ந்து வருவதைப் பிரதிபலிக்கிறது. இது மிகவும் முறைசார் காட்சியளித்தலிருந்து வேறுபடுகிறது.

லோவின் உருவப்படங்கள் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய, அரசு ஆளுமைகள் முதல் சாதாரண மக்கள் வரையிலான, சிங்கப்பூர் சமுதாயத்தின் குறுக்குவெட்டுத் தோற்றத்தைக் காட்டுகிறது, *கறுப்பு வெள்ளைப்* புகைப்படங்களுக்கு வண்ணம் சேர்க்க அவர் பெரும்பாலும் எண்ணெய்ப் பசை மற்றும் வண்ணப்பூச்சுகளைப் பயன்படுத்தினார், *இது*19 ஆம் நூற்றாண்டில் கறுப்பு மற்றும் வெள்ளைப் புகைப்படங்களைக் கையால் வண்ணமயமாக்கும் நடைமுறையிலிருந்து பெறப்பட்ட ஒரு நுட்பம் ஆகும்

சிங்கப்பூரின் ஓவிய அரங்கின் வளர்ச்சியில் லோ குவே சாங் ஒரு முக்கிய நபராக இருந்தார். 1911 ஆம் ஆண்டில், அவர் ராஃபிள்ஸ் ஓவியப் படைப்பகத்தை நிறுவினார், இது பின்னர் 1920 ஆம் ஆண்டில் ஆர்ச்சர்ட் சாலையில் ‘எம்பயர்’ படைப்பகமாக மாறியது. *அந்தப்* பிரபலமான படைப்பகம் புகைப்படம் எடுத்தல், உருவப்பட ஓவியம், சிங்கப்பூரின் பட அஞ்சல் அட்டைகள் ஆகியவற்றை வழங்கியதுடன்இயற்கைக்காட்சி ஓவியங்களையும்  கூட வழங்கியது. தனது சகோதரர்களான குவே சூ மற்றும் குவே கோவுடன் சேர்ந்து, லோ அவர்கள்
1909 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பயிற்சி வரைதல் சங்கத்தில் துடிப்புடன் செயல்பட்டார். அவர் 1911 இல் சங்கத்தின் கௌரவ ஓவியப் பயிற்றுவிப்பாளரானார். ஓவியச் சமூகத்தில் அவரது அங்கீகாரம் மற்றும் பல்வேறு ஓவியத் தேடல்கள் பல மதிப்புமிக்க வரைதல் பணியமர்த்தல்களுக்குவழிவகுத்தன, இதில் ராணி எலிசபெத் II இன் உருவப்படமும் அடங்கும், இது 1953 ஆம் ஆண்டில் முடிசூட்டு நாளில் மலாக்காஅரசாங்கத்திடம் வழங்கப்பட்டது.

ஓவியர் பெயர்தெரியவில்லை
*வணக்கத்துக்குரிய*ஜேம்ஸ் ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் உருவப்படம்
*வரையப்பட்ட ஆண்டு* 1916
காகிதத்தில் கையால் வண்ணமிடப்பட்ட ஜெலட்டின் வெள்ளி அச்சு

**SG1**

| |
|---|
| ஹரியட் நவமணி சுப்பிரமணியத்தின் உருவப்படம் (பிறப்புக்குடிப் பெயர்ஜோசப்)<br>*வரையப்பட்ட ஆண்டு* 1916<br>காகிதத்தில் கையால் வண்ணமிடப்பட்ட ஜெலட்டின் வெள்ளி அச்சு<br>டத்தோபால் சுப்ரமணியம், ஜேம்ஸ் திமோதி சுப்ரமணியம் மற்றும் மேத்யூ சுப்ரமணியம் ஆகியோரின் பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br><br>கையால் வண்ணமிடப்பட்ட ஒரு தமிழ்-கிறிஸ்தவத் தம்பதியினரின் இந்தப் புகைப்படங்கள் சிங்கப்பூரில் உள்ள பல்வேறு சமூகங்கள் புகைப்படக்கலையைப் பெருமளவில் பயன்படுத்துவதற்கான ஓர் எடுத்துக்காட்டு ஆகும். மேலும் இஃது அவர்களின் குடும்பத்தினரால் நினைவுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். திரு சுப்பிரமணியன் 1880 ஆம் ஆண்டில் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் யாழ்ப்பாண அரச குடும்பத்திலிருந்து வந்தவர். 1892 ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்கு வந்தபின், அவர் சமூகத்தில் ஒரு முக்கிய நபராக ஆனார், மேலும் முறையாளர் திருச்சபைச் சேவகர், தலைமை ஆசிரியர் மற்றும் மலேயா முழுவதும் உள்ள பள்ளிகளின் மாவட்ட கண்காணிப்பாளராக அவரது பாத்திரங்களுக்காக அவர் அறியப்பட்டார். அவரது மனைவி ஹாரியட் சுப்ரமணியம் (பிறப்புக்குடிப் பெயர் ஜோசப்) அவர்களுடன் *சேர்ந்து* இருவரும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டவர்களையும் தேவைப்படுபவர்களையும் தங்கள் திருச்சபையில் பார்வையிட்டனர். |
| கூ சூக் வான் (பிறப்பு 1874, சீனா; *இறப்பு* 1941, சிங்கப்பூர்), *அவர்* ஓர் அறிஞர், கலைப் புரவலர் மற்றும் சீன சமூகத்தில் முன்னணி நபராக இருந்தார். தியென் நாம் ஷின் பாவோ (天南新报) (1898–1905) *என்ற சீனச் செய்தித்தாளின் இணை நிறுவனராக*, பாரம்பரிய சீன ஓவியங்களை திரு கூ வெளியிட்டதுடன் செய்தித்தாளில் கலையைப் பாராட்டுதலை வளர்த்தார்.. அவரது முற்போக்கான கண்ணோட்டம் கலைகளுக்கு அப்பால் விரிவடைந்தது. அவர் சிறுமிகளுக்கான கல்வியை ஆதரித்தார், மேலும் 1899 ஆம் ஆண்டில், அவர் மற்றக் குறிப்பிடத்தக்க நபர்களான சோங் ஓங் சியாங் மற்றும் லிம் பூன் கெங் ஆகியோருடன் *சேர்ந்து* சிங்கப்பூர் சீனச் சிறுமிகள் பள்ளியை நிறுவ உதவினார். . கல்விச் சீர்திருத்தம் மற்றும் குறுக்குக் கலாச்சார இலக்கியப் பரிமாற்றத்தில் அவரது முயற்சிகள் சிங்கப்பூரின் ஆரம்பகாலக் கலாச்சாரப்பரப்பை வடிவமைத்தன. |
| சூ புன் டிங் (苏彬庭)<br>(*பிறப்பு* தெரியாதவர்; *இறப்பு* தெரியாதவர், சிங்கப்பூர்)<br>'சீத் ஹூட் கீ' யின் உருவப்படம்<br>1917 |

**SG1**

கித்தானில் எண்ணெய்
தனியா ரின் திரட்டு

சிங்கப்பூரின் ஆரம்பகால ஓவிய அரங்கினில் சூ பன் டிங்கின் இருப்பு பெரும்பாலும் 1906 ஆம் ஆண்டிலேயே அவரது படைப்பகத்தில் வைத்து பயிற்றுவிக்கப்பட்ட வரைதல் மற்றும் ஓவியப் படிப்புகளுக்கான செய்தித்தாள் விளம்பரங்கள் மூலம் அறியப்படுகிறது. சிங்கப்பூரில் குறிப்பிடத்தக்க ஹொக்கீன் சமூகத் தலைவரும் கொடையாளியுமான மலாக்காவில் பிறந்த சீட் ஹூட் கீ (薛佛记, 1793–1847) என்பவரை இங்கு *அவர்* நினைவுகூர்கிறார். இந்த ஓவியத்தில் சீட் ஒரு விசிறியை வைத்திருக்கும் போது, ஒரு சீன இலக்கிய அறிஞரின் பாணியில் சித்தரிக்கப்படுகிறார், இது கற்றலுக்கும் மதிப்புக்கும் அடையாளமாகும். ஹொக்கீன் குலச் சங்கத் தின் முன்-அடையாளமாக இருந்த ஹெங் சான் டெங் கல்லறைக் கோவிலை நிறுவ சீட் உதவினார்.

டோரா கோர்டினே
(*பிறப்பு* 1895, லாட்வியா; *இறப்பு* 1991, ஐக்கிய இராச்சியம்)
சீனத் தலை
*வரையப்பட்ட ஆண்டு* 1930–1931
வெண்கலம்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
1997-02652

ஓவியம் தீட்டுதல், வரைதல் மற்றும் சிற்பம் வடித்தல் ஆகியவற்றில் கோர்டினே சிறந்து விளங்கினார். சீனத் தலை, அவரது சிற்பங்களுக்கு என தனித்துவமான பளபள மேற்பரப்புகளும் விரிவான நுணுக்கமிகு விளிம்புகளும் இருப்பதைக் காட்டுகிறது.

மார்பளவுச் சிற்பத்தின் அம்சங்கள் அந்த நேரத்தில் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஆசிய உடற்கூறியல் பற்றிய ஒரே வகைப் பண்புகளைப் பிரதிபலிக்கின்றன. பொதுமைப்படுத்தப்பட்ட இனவரைவியல் வகைகளின் அளித்தலும் , ஐரோப்பிய ஓவியர்கள் மற்றும் எழுத்தாளர்களால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர்வாசிகள் பற்றிய அயல் பார்வையைப் பிரதிபலிக்கிறது. இந்தப் படைப்பு 1931 ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் நகராட்சி கட்டிடத்திற்காக கோர்டினே தயாரித்த இன அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட மார்பளவுச் சிற்பக் குழுவைப் போன்றது.

“நான் கிழக்கால் ஈர்க்கப்பட்டேன், அதன் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டேன், அதன் இயற்கையான அழகைக் கொல்லும் மேற்கத்தியத் தாக்கங்கள் பற்றி வருத்தப்படாமல் இருக்க முடியாது.”
டோரா கோர்டினே, “அத்தாப்பு படைப்பகத்தில் சிற்பக்கலை,” தி ஸ்ட்ரைட்ஸ் டைம்ஸ், 1930.

**SG1**

டோரா கோர்டினே தனது உருவக வெண்கலப் படைப்புகள், ஓவியங்கள் மற்றும் வரைபடங்களுக்காகப் பிரபலமானவர். ஒரு சுய-கற்றல் *முறைக்* கலைஞர், அவர் தனது *தொழில்*வாழ்க்கையின் ஆரம்பத்தில் அங்கீகாரம் பெற்றார், *அவரது படைப்புகள்* 1925 ஆம் ஆண்டில் *பாரிஸில் நடைபெற்ற* நவீன அலங்கார மற்றும் தொழில்துறைக் கலைகளின் சர்வதேசக் கண்காட்சியில் ஆங்கிலேயப் பந்தலில் காட்சிக்கு வைக்கப்பட்டன.

1930 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் மலாயாவைப் பார்வையிட காலனித்துவ ஆலோசகர் ரோலண்ட் பிராடெல் அவர்களால் கோர்டினே அழைக்கப்பட்டார், இறுதியில் மலேசியாவின் ஜோஹோர் பாருவில் தனது படைப்பகத்தை அமைத்தார். ஒரு வருடத்திற்குப் பிறகு சிங்கப்பூரில் உள்ள மாநகராட்சிக் கட்டடத்திற்கான சிற்பங்களைத் தயாரிக்க பணியமர்த்தல் ஒன்றைப் பெற்றார் (பின்னர் நகர மண்டபம் என்று பெயரிடப்பட்ட *அது* இன்று சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் ஒரு பகுதியாகும்), இந்தியத் தலை, மலாய்த் தலை மற்றும் சீனத் தலை என மூன்று மார்பளவுச் சிற்பங்களை உருவாக்கினார். இன்றைய நாடாளுமன்றக் கட்டிடத்தில் இந்த மார்பளவுச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

---

ரிச்சர்ட் வாக்கர
(*பிறப்பு* 1896, ஐக்கிய இராச்சியம்; *இறப்பு* 1989, ஐக்கிய இராச்சியம்)
கைலி விற்பனையாளரான ஜாக்கிஸ்
தேதியற்றது
பலகையில்எண்ணெய்
ஒரு பெயரறியப்படாதநன்கொடையாளரின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
2011-01731

இந்த விரிவான அம்சங்கள் கொண்ட உருவப்படம் ஜாக்கிஸ், ஒரு கைலி விற்பனையாளர் ஆவார், அவர் தூரத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரது கைலி மற்றும் தலைப்பாகை ஆகியவற்றின் பொருட்பண்புகளை ரிச்சர்ட் வாக்கர் தனது ஓவியத்தில் முழுவதுமாகக் கொண்டுவந்திருக்கிறார், அதே நேரத்தில் இயல்பான விவரங்களுடன் ஜாக்கிஸின் தோற்றத்தை முன்வைக்கிறார். உள்ளூர் அரசாங்க ஆங்கிலப் பள்ளிகளின் முதல் ஓவிய ஆசிரியர் மற்றும் ஓவியக் கண்காணிப்பாளராக, வாக்கர் மாணவர்களுக்கு எண்ணெய் மற்றும் நீர்வண்ண ஓவியத்தில் வலுவான அடிப்படைகளை வழங்கினார்.

---

ருடோல்ஃபோ நோல்லி
(*பிறப்பு* 1888, இத்தாலி; *இறப்பு* 1963, இத்தாலி)
செசில் தெரு, மெடெய்ரோஸ் கட்டடத்தில் உள்ள புடைப்புச் சிற்பம்: ‘காமர்ஸ்’

**SG1**

1937
வெள்ளை போர்ட்லேண்ட் சிமென்ட் மற்றும் கட்டிகள்
அலெக்ஸ் குவோக்கின் மாமா டாக்டர்  டாக்டர் கென்சன் குவாக்கின் நினைவாக அவர் அளித்த பரிசு.
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடம்
2016-00367

1921 முதல் 1956 வரை, இத்தாலியச் சிற்பி ருடோல்ஃபோ நோல்லி சிங்கப்பூரில் இருந்தார்.
முன்னாள் உச்சநீதிமன்றம் மற்றும் நகர மண்டபம்- இன்றைய தேசியக் கலைக் கூடத்தின் அங்கமாக உள்ள கட்டடங்கள் உட்பட பல முக்கிய முகப்புகளுக்கு அவர் ஏராளமான புடைப்புச் சிற்பங்களைஉருவாக்கினார்.

சிங்கப்பூரின் மத்திய வர்த்தக மாவட்டத்தில் உள்ள மெடிரோஸ் கட்டிடத்தின் வெளிப்புறத்தை அலங்கரிக்கும் தொடர்ச்சியான புடைப்புச் சிற்பங்களின்ஒரு பகுதியாக ‘காமர்ஸ்’இருந்தது. அந்தக் காலத்தின் முக்கிய தொழில்களான வேளாண்மை, கப்பல் போக்குவரத்து, கட்டுமானம் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் பிரதிநிதித்துவமாக இந்தப் புடைப்புச் சிற்பங்கள் இருந்தன.

**SG1**

கையெழு எழிலெழுத்து என்பது எழுதுதல் அல்லது அலங்கரித்தலுக்காக வரியைப் பயன்படுத்துவதாகும், மேலும் அது சிங்கப்பூரில் உள்ள பல கலாச்சாரங்களின் நடைமுறையில் ஆழமான மற்றும் மாறுபட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. சிங்கப்பூரில் ஓவியர்கள் சீன ஓவியப் பாணிகள் மற்றும் வடிவங்களை ஆராய்ந்து, வெவ்வேறு பார்வையாளர்களுக்கும் விளங்குபொருள்களுக்கும்ஏற்ப தங்கள் படைப்புகளை வடிவமைத்தனர். இதற்கிடையில், *அராபிக் மொழியிலிருந்து உருவாக்கப்பட்ட எழுதுமுறையான ஜாவியின் பெரும் பயன்பாடு,* 1965 ஆம் ஆண்டு சுதந்திரம் அடையும் வரை சிங்கப்பூரில் நிர்வாகம், வர்த்தகம் மற்றும் அன்றாட வாழ்க்கையின் முதன்மை மொழியாக மலாய் மொழியின் முக்கியத்துவத்தைச் சிறப்பித்துக் காட்டியது. அச்சிடுதல் மற்றும் அச்சுக்கோர்த்தல்ஆகியவற்றில் முன்னேற்றங்கள் தோன்றியபோது, ஓவியர்களும் வடிவமைப்பாளர்களும் இந்த எழுத்துருக்களைஆக்கப்பூர்வமாக மாற்றியமைத்தனர், திரைப்படம் மற்றும் புத்தெழில் போக்குப் பத்திரிகைகள் போன்ற பிரபலமான வடிவங்களில் அவற்றின் வெளிப்பாட்டுப் பண்புகளை ஆராய்ந்தனர்.

---

கவ் ஜுன்பாய் (高俊百)
(*பிறப்பு* தெரியாத; *இறப்பு* தெரியாத)
*இங் சென் சோய்*க்கு அர்ப்பணிக்கப்பட்ட மர அடையாளப் பலகை
1939
மரம்
ஆசிய நாகரிகங்கள் அருங்காட்சியகத்தின் திரட்டு
W-0276-E

இந்த அடையாளப் பலகையில் உள்ள கையெழு எழிலெழுத்துகள், 1938 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து பாராட்டுப் பதக்கத்தை வென்ற உள்ளூர் தொழிலதிபர் இங் சென் சோயைக் (伍燊才) கொண்டாடுகிறது. சீன வணிக உரிமையாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் சீனாவில் பொதுவான ஒரு நடைமுறையைத் தொடர்ந்து கடைபிடித்தனர், *அதன்படி* வணிகங்கள், கடைகள் மற்றும் கோயில்களுக்கான மரப் பலகைகள் அல்லது அடையாளப் பலகைகளில் எழுத திறமையான ஓவியர்களை அடிக்கடி பணியமர்த்தினர்.

---

லிம் சு சுவான் (林子瑄)
(*பிறப்பு* 1907, சீனா; *இறப்பு* 1966, சிங்கப்பூர்)
இலக்கு
1939
காகிதத்தில் சீன மை
ஓவியரின் குடும்பத்தின் திரட்டு

**SG1**

லிம் சு சுவான் சீனக் கையெழு எழிலெழுத்துகளைப் பயன்படுத்தி இளமை முதல் முதிர்ச்சி வரையிலான தனது தனிப்பட்ட பயணத்தின் பிரதிபலிப்புப் பதிவை எழுதுகிறார்.

வோங் ஜெய் லிங் (黄载灵)
(*பிறப்பு* 1895, சீனா; *இறப்பு* 1973, சிங்கப்பூர்)
வெள்ளைக் கொத்திப்பேரிப் பூக்கள் (பதிப்புத் தகவலுடன்)
1945–1955
அரிசிக் காகிதத்தில் மை மற்றும் நிறம்
திருவாட்டி இங்-லிம் சோங் கியூக்கின் பரிசு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
2004-00531

பத்து ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட 21 கவிதை வடிவ பதிப்புத் தகவல்கள் இந்தக் கொத்திப்பேரிப் பூக்கள் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளன.

To read the full original text and translation, scan the QR code.

செர்ன் யெட் சியூ (陈月秀)
(*பிறப்பு* 1911, சீனா; *இறப்பு* 2002, சிங்கப்பூர்)
ஓடும் எழுத்துருக்களில் எழுதப்பட்ட ஈரடி ச் செய்யுள்
1938
காகிதத்தில் சீன மை
சிங்கப்பூர் தேசிய க் கலைக்கூடத்தின் திரட்டு
1994-05080

இந்தப் படைப்பு செர்ன் எட் சியூவின் ஓடுமுறை கையெழு எழிலெழுத்து அல்லது காவ்ஷு (草书) பாணிக்கான முயற்சியாகும், இஃது அதன் தளர்வான, ஓடும் தூரிகையடிப்புகளுக்காக அறியப்படுகிறது. மலரும் பூக்களால் சூழப்பட்ட ஓர் அமைதியான வீட்டைப் பற்றி இந்தக் கவிதை விவரிக்கிறது. இவர் ஒரு திறமையான கையெழுது எழிலெழுத்தாளர் மற்றும் ஓவியர் ஆவார். மேலும் சிங்கப்பூரில் ஓவியக் கல்வியை ஊக்குவித்தார். சிங்கப்பூர் சீன ஓவியர்கள் சங்கத்தின் முதல் உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அவர், நன்யாங் பெண்கள் உயர்நிலைப் பள்ளி உட்பட பல்வேறு பள்ளிகளில் கற்பித்தார்.

To read the full original text and translation, scan the QR code.

லிம் ஹக் டை (林学大)
(*பிறப்பு* 1893, சீனா; *இறப்பு* 1963, சிங்கப்பூர்)
திருச்சபை சார்ந்த எழுத்துருக்களில் எழுதப்பட்ட கையெழுது எழிலெழுத்தால் ஆன ஈரடிச் செய்யுள்
தேதியற்றது

**SG1**

| |
|---|
| காகிதத்தில் சீன மை<br>திரு. லிம் யூ குவான் அவர்களின் பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு<br>2015-00586<br><br>款式:<br>春歸花不落, 風靜月長明<br>குறிப்பு வாசகம்:<br>வசந்த காலம் முடிந்துவிட்டது ஆனால் பூக்கள் விழவில்லை; காற்று இன்னும் இருக்கிறது; சந்திரன் என்றென்றும் பிரகாசமாக இருக்கிறது |

SG1

## கற்பனை தேசம்

சிங்கப்பூர் கலை வடிவம் எவ்வாறு தோன்றுகிறது?

ஒரு காலத்தில் ஜோகூர் அரசாட்சியின் பகுதியாக இருந்த சிங்கப்பூர், கடல்சார் தென்கிழக்கு ஆசியாவுடன், நன்யங் (அதாவது "தெற்கு கடல்கள்") என்ற சீனக் கடல்வழிக் களமாகச் சேர்க்கப்பட்டது. பின்னர், 1965 இல், சிங்கப்பூர் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு, 1963 இல் பிரிட்டிஷ் மலேசியாவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது.. அந்த மாற்றங்கள் முழுவதையும், கலைஞர்கள், நாட்டு மக்கள், நிலப்பரப்பு, கலாச்சாரங்களின் தனித்துவமான அம்சங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து சித்தரித்தனர். அதோடு, அந்த இடத்திற்குரிய தங்கள் சொந்த உணர்வையும் காட்டினர்.

1930 களில், நன்யாங் நுண்கலைக் கழகம் போன்ற சிறப்புப் பள்ளிகள் நிறுவப்பட்டன. அது ஆர்வமிக்க கலைஞர்களுக்கு, முறையான பாடங்களைக் கற்பித்தது.. கலைகளைக் கற்பித்தச் சங்கங்கள், கற்றல், கற்பித்து வழிகாட்டுதல், மிக முக்கியமாக, படைப்புகளை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்குரிய முக்கிய இடங்களாகவும் உருவெடுத்தன. அந்த வளர்ந்து வந்த உட்கட்டமைப்புடன் இணைந்து, அவசரமாக வரையறுக்க வேண்டிய தேவையும் இருந்தது.
வேகமாக மாறிவரும் சமூகத்தில், கலையின் பங்கு; சிங்கப்பூரின் அடையாளம் எனக் கேள்விகளுடன் போராடியபோது, கலைஞர்கள் தங்கள் தனிப்பட்ட எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், உள்ளூர், உலகளாவிய அளவில், தேசிய அடையாளத்தைத் கண்டறியவும் ஆதரவளித்தனர். .

சிங்கப்பூரின் நவீனக் கலைத் துறை வளர்ச்சியில் கலைஞர் லியு காங், பங்கை லியு காங் கூடம் நினைவுகூர்கிறது. மே 2003 இல், லியு காங் (1911-2004), அவர் மனைவி சென் ஜென் பின் (1913-2009) ஆகியோர் சிங்கப்பூரின் தேசியச் சேகரிப்புத் தொகுப்புக்கு, 1,000 த்திற்கும் மேற்பட்ட படைப்புகளை, நன்கொடையாக வழங்கினர். கலைஞர் ஒருவரின் படைப்புகளில், இது மிகப்பெரிய நன்கொடையாகும்.

இக்சு பெய்ஹோங் (徐悲鸿)
(*பிறப்பு* 1895, சீனா; *இறப்பு* 1953, சீனா)
லிம் லோவின் உருவப்படம்
1927
கித்தானில் எண்ணெய்
லிம் லோவின் நினைவாக லிம் குடும்பத்தின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2008-06607

**SG1**

இந்த உருவப்படம், சிங்கப்பூரின் வெற்றிகரமான தொழிலதிபரும் சிங்கப்பூரின் போர் நாயகன்லிம் போ செங்கின் (1909-1944) தந்தையுமாகிய லிம் சீ கீ (லிம் லோஹ் என்றும் அறியப்படுகிறார்) *அவர்களுடையது.*

இக்சு பெய்ஹோங் 20 ஆம் நூற்றாண்டில் நவீன சீன ஓவியத்தின் மிக முக்கியமான ஓவியர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார், மேலும் ஐரோப்பாவில் பயிற்சி பெற்ற ஆரம்பகால சீன ஓவியர்களில் ஒருவர். 1930 களின் பிற்பகுதியில் மலேயாவுக்கு வருகைசெய்தபோது அவரது கலை ஆர்வங்களை ஆதரித்த செல்வாக்கு மிக்க புரவலர்கள் மற்றும் சமூக வட்டங்களை இக்சுவின் உருவப்படங்கள் பிரதிபலிக்கின்றன.

---

இட்சாங் ஜு சி (张汝器)
(*பிறப்பு* 1904, சீனா; *இறப்பு* 1942, சிங்கப்பூர்)
இந்தியச் சிறுவன்
1939
கித்தானில் எண்ணெய்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2021-00081

சிங்கப்பூரின் பலவகைக் கலாச்சார நெய்வுகளைச் சித்தரிப்பதில் 'இட்சாங் ஜு சி'க்கு இருந்த ஆர்வத்தை இந்தப் படைப்பு பிரதிபலிக்கிறது. இட்சாங் சீனச் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றி, மலேயாவின் கலை நிலப்பரப்பை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தார். 1939 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் 'இக்சூ'வின் வருகையின் போது இக்சூ பெய்ஹோங்கின் கண்காட்சியை *சங்கம்* ஏற்பாடு செய்தது. அதே ஆண்டில், தாய் மற்றும் மகள் என்ற தலைப்பில் ஓர் இட்சாங்கின் மனைவி மற்றும் இட்சாங்கின் மகள் *ஆகியோரின்* உருவப்படத்தை இக்சூ உருவாக்கியுள்ளார்.

---

லீ செங் யோங் (李清庸)
(*பிறப்பு* 1913, மலேசியா; *இறப்பு* 1974, மலேசியா)
சுய உருவப்படம்
1939
பலகையில் வைக்கப்பட்ட கித்தானின் மீது எண்ணெய்
லிண்டா நியோ மற்றும் ஆல்பர்ட் லிம் ஆகியோரின் திரட்டு

யோங் மூன் சென் (杨曼生)
(*பிறப்பு* 1896, மலேசியா; *இறப்பு* 1962, மலேசியா)
செஸ் விளையாட்டில்
1936
கித்தானில் எண்ணெய்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
2021-00078

SG1

| |
|---|
| மலேசியாவில் பணிபுரியும் ஓவியர்கள் உள்ளூர்க் கதைகளை கித்தானில் மொழிபெயர்த்த பல்வேறு வழிகளை இந்க் கலைப்படைப்புகள் காட்டுகின்றன. யின் யிங் ஓவியச் சங்கம் மற்றும் சீன ஓவியர்களின் சங்கம் போன்ற சமூகங்கள் மூலம் துடிப்பான ஓவியச்சமூகங்களை வளர்ப்பதில் லீ சியோங் யோங் மற்றும் யோங் முன் சென் ஆகியோர் முக்கியப் பங்கு வகித்தனர்.<br><br>சுய-கற்றல் மற்றும் நிறுவன பயிற்சி பெற்ற ஓவியர்களை வரவேற்க, தென்கிழக்கு ஆசிய மக்கள் மற்றும் நிலப்பரப்புகளுடன் இந்தக் குழுக்கள் தொடர்பிலிருந்தன. |
| ஜார்ஜெட் சென் (张荔英)<br>(*பிறப்பு* 1906, சீனா; *இறப்பு* 1993, சிங்கப்பூர்)<br>குடும்ப உருவப்படம்<br>*வரையப்பட்ட ஆண்டு* 1954–1955<br>கித்தானில் எண்ணெய்<br>ஓவியரின் குடும்பம் வழங்கிய பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு<br>1994-04123<br><br>குடும்ப உருவப்படம் என்பது 1951 ஆம் ஆண்டில் மலேசியாவுக்கு வந்த பின்னர் ஜார்ஜெட் சென் *செய்து*முடித்த மிகப்பெரிய படைப்பாகும். அன்பான நண்பர்களின் நெருக்கமான கொண்டாட்டமாகச் செயல்படும் இந்த உருவப்படம், சாதாரண மக்களைத் தனது கலையில் சித்தரிப்பதில் சென்னுக்கு இருந்த ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது. நெருங்கிப் பிணைக்கப்பட்ட நவீன குடும்பம் ஒன்றைத் தொடர்புப்படுத்திப் பார்க்கும் படத்தை முன்வைக்கிறது. |
| லியு காங் (刘抗)<br>(*பிறப்பு* 1911, சீனா; *இறப்பு* 2004, சிங்கப்பூர்)<br>தீக்குப் பின்னர் II<br>1951<br>கித்தானில்எண்ணெய்<br><br>செங்கல் தொழிற்சாலையில் வேலை<br>1954<br>கித்தானில்எண்ணெய்<br>ஓவியரின்குடும்பத்தின் பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு<br>2003-03336 \| 2003-03255<br><br>1950 களில் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய புனரமைப்புப் பணிகளில் லியு காங்கின் ஆர்வத்தை இந்தப் படைப்புகள் பிரதிபலிக்கின்றன. |

| |
|---|
| , குறிப்பாகத் தொழிற் மற்றும் வேலைவாய்ப்பு மூலம் அதைச் செய்யவிரும்பினார். செங்கல் தொழிற்சாலையில் பணிபுரியும் போது, தூரத்தில் புகை உமிழும் தொழிற்சாலைகள் உற்பத்தியின் அளவைக் குறிக்கின்றன, அதே நேரத்தில் லியு பார்வையாளரின் கவனத்தை முன்னணியில் உள்ள தொழிலாளர்கள் மீது கொண்டு வருகிறார். ‘*தீக்குப் பின்னர்* II’ 1950 ஆம் ஆண்டில் ஐக் ஹோ ரப்பர் தொழிற்சாலையில் ஏற்பட்ட பேரழிவு தரும் தீ விபத்தைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. |
| "**本来**，艺术的感应力是没有国界的。艺术是一个人向着人类心灵的未知世界所探讨而创造出来的作品。它的最高成就便是全人类的共同的心声。”<br><br>“ஓவியத்தின்வலிமைக்கு தேசிய எல்லைகள் தெரியாது.<br>ஓவியம்என்பது<br>ஆன்மாவின் அறியப்படாத உலகம் பற்றிய ஒரு நபரின் ஆய்வினால் உண்டாகும் தயாரிப்பு. மனிதக் குலத்தின் பொதுவான உணர்வை பிரதிநிதித்துவப்படுத்துவதே அதன் மிக உயர்ந்த சாதனை. ”<br><br>லியு காங், லியு காங்: ஓவியம்மற்றும் கலாச்சாரம் பற்றிய கட்டுரைகள், 2011.<br><br>1937 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் குடியேறுவதற்கு முன்பு லியு காங் ஷாங்காய் மற்றும் பாரிஸில் ஓவியப் படிப்பை மேற்கொண்டார். உணர்ச்சி வண்ணங்கள் மற்றும் *உணர்வுப்பதிவுவாதத்துக்குப்* பிந்தைய *உணர்வு* வெளிப்பாட்டுத் தூரிகையடிப்புகள் உள்ளிட்ட - ஓவியத்தில் *அவருக்கு இருந்த* வலுவான அடித்தளம் - லியுவின் தனித்துவமான பாணியை வடிவமைத்தது, அப்பாணி தடித்த வண்ணங்கள்,<br>எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்கள் மற்றும் உண்மையுலகக் கருப்பொருள்களைக் கொண்டுள்ளது. *தென்கிழக்கு ஆசியாவில்* லியுவின் விரிவான பயணங்கள்<br>கலாச்சாரக் கருப்பொருள்கள் மற்றும் கிராமப்புற தலைப்புப் பொருள்களுக்கான ஏக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.<br><br>சீன ஓவியர்கள் சங்கம் மற்றும் சிங்கப்பூர் ஓவியச் சங்கத்தின் தலைவராக லியு பணியாற்றினார், மேலும், சிங்கப்பூரில் சீன மொழிப் பள்ளிகளில் கற்பித்தார். |
| முகமது சலேஹுதீன்<br>(*பிறப்பு* 1914, மலேசியா; *இறப்பு* 1982, மலேசியா)<br>மலாக்காவில் உள்ள மலாய் வீடு<br>*வரையப்பட்ட ஆண்டு* 1960<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு<br>2014-01431 |

1949 ஆம் ஆண்டில் மலேயாவின் மலாய் ஓவியர்கள் சங்கத்தின் (Persekutuan Pelukis Melayu Malaya) நிறுவன உறுப்பினராக முகமது சலேஹுதீன் இருந்தார். இளைய தலைமுறை மலாய் ஓவியர்களை ஆதரித்து அவர்களை வளர்க்கும் எதிர்கால முயற்சிகளுக்கு இச்சங்கம் வழி வகுத்தது.

மனிதனும் சுற்றுச்சூழலும் இணக்கமாக வாழும் காட்சியை முன்வைத்து, கிராமப்புற வாழ்க்கையின் காதல் நிறைந்த பார்வையை சாலஹுதீன் வெளிப்படுத்துகிறார். இறக்குமதி செய்யப்பட்ட பீங்கான் ஓடுகளால் அலங்கரிக்கப்பட்ட அதன் சிறப்பியல்புமிக்க விரிவான முன் படிகளுடன், ஒரு பெரிய மலாக்கா பாணி வீட்டின் தனித்துவமான அம்சங்களை அவர் பதிவு செய்கிறார்.

*எஸ்.* மஹ்தார்
(*பிறப்பு* 1934, சிங்கப்பூர்; *இறப்பு* தெரியவில்லை)
சன் ஆஃப் சைல் 1957
காகிதத்தின் மீது கரிக்கோல் (பென்சில்)

பெர்ஜுவாங்கன் டி மலாயா
(மலேசியாவில் போராட்டம்)
1951
காகிதத்தின் மீது கரிக்கோல் (பென்சில்)

நிலைப்பொருள் ஓவியம் – குவளை, கோசுக்கிழங்குகள் மற்றும் தக்காளி
1947
கித்தானில் எண்ணெய்
லோக் வான் தோவின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
P-0054 | P-0063 | P-0034

“Tetapi, siapa kerja keras-keras, siapa rajin menggambar, dia akan menjadi pelukis atau artist.”
(கடினமாக வேலை செய்பவர், விடாமுயற்சியுடன் வரைபவர் ஓவியராகவோ
ஒரு வரைநராகவோ *மாறுவார்*
*எஸ்.* மகதர், “துனாஸ் செலூகிஸ் ‘60,” பெர்டியா ஹரியன், 1960.

*எஸ்.* மகதரின் திறமை சிறுவயதிலிருந்தே வெளிப்படையாகத் தெரிந்தது. 1953 ஆம் ஆண்டில், வெறும் ஒன்பது வயதில், அவரது படைப்புகள் Persekutuan Pelukis Melayu Malaya (மலாய் ஓவியர்கள் சங்கம், மலாயா) ஏற்பாடு செய்த இளம் ஓவியர்களுக்கான கண்காட்சியில் இடம்பெற்றன. மஹ்தார் தனது ஓவியங்களில் அவர் கொண்டு வந்த பச்சாத்தாபம் மற்றும் இயற்கைவாதம் ஆகியவற்றின் காரணமாக

| |
|---|
| விரைவில் அனைவராலும் அறியப்பட்டார். 1950கள் மற்றும் 1960களில், மஹ்தார் ஓவியர்ச் சமூகத்தில் ஒரு நிலைத்துவிட்ட நபராக இருந்தார். இளம் மலாய் ஓவியர்களுக்கு வழிகாட்டியாகவும், பல்வேறு அமைப்புகளில் கற்பிப்பதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். இளம் மலாய் ஓவியர்களுக்கான ஒரு சமூகமான டுனாஸ் ‘60 (*வளரும் இளம் ஓவியர்கள்* ‘60) இன் வழிகாட்டியாக அவர் ஆனார்.<br><br>இந்தப் படைப்புகள் எஸ். மகதரின் வரைதல் மற்றும் ஓவியம் தீட்டுதல் இரண்டிலும் *அவர் செய்த* சாதனைகளைக் காட்டுகின்றன. 1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் ஓவியச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் ஓவியர்களின் படைப்புகளின் 8 வது கண்காட்சியில் ஒரு உள்நோக்கு உருவப்படமான ‘சன் ஆஃப் சைல் காட்சிக்கு வைக்கப்பட்டது. இந்த உருவப்படம் மகதரின் தொழில்நுட்பத் திறன்களை, அவரது நிழல் மற்றும் தெளிவான கோடுகளின் திறமையான பயன்பாட்டின் மூலம் எடுத்துக்காட்டுகிறது. அன்றாட வாழ்க்கைக் காட்சிகள் மற்றும் மக்களுடன் சேர்ந்து வரையப்பட்ட, பெருஜுங்கன் டி மலாயா (மலாயாவில் போராட்டம்) என்ற உருவகப்படுத்தப்பட்ட வரைபடம் சமூகத்தின் கவலைகளைப் பிரதிபலிக்கும் ஒரு வழிமுறையாக ஓவியம் இருக்கிறது *என* மகதருக்கு இருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. |
| தேசிய அடையாளம் மற்றும் மொழி பற்றிய கேள்விகளை வெளிப்படுத்துவதிலும் ஆராய்வதிலும் *விளக்கப்படங்கள், கருத்தோவியங்கள் மற்றும் மரவேலைப்பாட்டு அச்சுகள்* முக்கியப் பங்கு வகித்தன, குறிப்பாக 1950 களின் நடுப்பகுதியிலிருந்து 1960 கள் வரை அவை பெரும்பங்காற்றின. இந்தப் படங்கள் பிரபலமான காலப் பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்களில் வெளிவந்தன, மேலும், *அவை* அன்றைய பிரச்சினைகளை விரைவாகவும் தெளிவாகவும் எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. அவை இருமொழித் தலைப்புகளைக் கொண்டிருந்ததுடன், சமூக-அரசியல் பிரச்சினைகள் குறித்து கருத்துகளை வழங்கின. இந்தப் படங்கள் ஒரு பல-இனச் சமூகத்தில் நிலவும் வாழ்க்கையின் சிக்கலான தன்மைகளையும், குறிப்பிடத்தக்க சமூக மாற்றத்துக்கான காலக்கட்டத்தில் *நடைபெற்ற* கலாச்சாரப் பிரதிநிதித்துவம் பற்றிய தொடர்ச்சியான பேச்சுவார்த்தையையும் பிரதிபலிக்கின்றன. |
| லிம் ஹக் டை (林学大)<br>(*பிறப்பு* 1893, சீனா; *இறப்பு* 1963, சிங்கப்பூர்)<br>வனப்பகுதியை சுத்தம் செய்யும் இந்தியத் தொழிலாளர்கள்<br>1955<br>பலகையில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>P-0968 |

**SG1**

| |
|---|
| இந்தப் படத்தில், லிம் ஹக் டை, அடர்ந்த காடுகளைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்களைச் சித்தரிக்கிறார். தொழிலாளர் மற்றும் தொழில்துறையில் அவர் கவனம் செலுத்துவது என்பது மலேயாவின் வாழ்க்கையின் யதார்த்தங்களை ஓவியத்தில் கொண்டுவருவதில் அவருக்கு இருந்த பரந்த ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.<br><br>நன்யாங் நுண்கலைக் கழகத்தின்நிறுவன முதல்வராகஇருந்த லிம், ஓவியம்சமூகத்தின் தேவைகளைப் பிரதிபலிக்க வேண்டும் என்றும்மலேய வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தின் தனித்துவமான அம்சங்களைக் தன்னகத்தே கொண்டுவர வேண்டும் என்றும் 1955 இல் ஒரு கட்டுரையை எழுதினார். கழகத்தில் ஜோர்ஜெட் சென் மற்றும் சென் வென் இஹ்சி போன்ற பிற முக்கிய நபர்கள் இந்த இலட்சியங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைப் புதிய தலைமுறை சிங்கப்பூர் ஓவியர்களிடம் கடத்தினர். இந்த ஓவியர்கள் மற்றும் அவர்களது மாணவர்களின் பல்வேறு பாணிகளும் துடிப்பான வெளிப்பாடுகளும்சேர்ந்து<br>இறுதியில் நன்யாங் பாணி ஓவியம் என அறியப்பட்டது. |
| கோஹ் சியா யோங் (许锡勇)<br>(பிறப்பு 1938, சிங்கப்பூர்)<br>இதோ அவர்கள் வருகிறார்கள்!<br>1965<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2002-00423<br><br>நிலநடுக்கோட்டுப் பகுதி ஓவியச் சங்கத்தில் கோஹ் சியா யோங் ஓர் உறுப்பினராக இருந்தார். கோஹ் அவர்களின் ‘இதோ அவர்கள் வருகிறார்கள்!’ காவல்துறையிடமிருந்து தப்பி ஓடிப்போன உரிமம் பெறாத தெரு வியாபாரிகளைக் காட்சிப்படுத்துகிறது, 1960களில் சிங்கப்பூர் அதன் தெரு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த முயன்றபோது இவை பொதுவான நிகழ்வுகளாகும். இந்த இயக்கம் கொண்ட கோர்வை, அந்தச்சூழ்நிலையின் பதற்றத்தையும் அவசரத்தையும் உணர்த்துகிறது. |
| டைபூன் பின்(郑文彬)<br>(பிறப்பு 1936, இந்தோனேசியா; இறப்பு 2020, சிங்கப்பூர்)<br>தொழிலாளர்கள் ஓய்வெடுத்தல்<br>தேதியற்றது<br>கித்தானில்எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2012-00277 |

நிலநடுக்கோட்டுப் பகுதி ஓவியச்சங்கத்தின் உறுப்பினரான டைபூன் பின்னின் படைப்புகள், சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்னிலைப்படுத்தும் குழுவின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. தொழிலாளர்கள் ஓய்வெடுத்தல் ஓவியத்தில், அவர் ஓர் அமைதியான காட்சியைப் *படத்தில்* பிடிக்கிறார், தொழிலாளர்களை அவர்கள் ஓய்வெடுக்கும் தருணத்தில் சித்தரிக்கிறார். தொழிலாளர்களின் தெளிவாக வரையறுக்கப்பட்ட *உணர்ச்சி* வெளிப்பாடுகளைச் சித்தரிக்க டை  ஒருவெளிராத வண்ணத் தட்டைப் பயன்படுத்தினார், இஃது அவர்களின் தனிப்பட்ட அனுபவங்களின் பிரதிபலிப்பாகும்.

---

சுவா மியா டீ (蔡名智)
(*பிறப்பு* 1931, சீனா)

மலேயாவின் காவியக் கவிதை
1955
கித்தானில் எண்ணெய்
[Adopt Now] ஆதரவாளர்கள் இந்தப் படைப்பைக் கூட்டாக ஏற்றுக்கொண்டனர்.

தேசிய மொழி வகுப்பு
1959
கித்தானில் எண்ணெய்
நிலநடுக்கோட்டுப் பகுதி ஓவியச் சங்கத்தின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2006-01219 | P-0145

---

“寻找题材，是画家借以表达思想感情的过程。找什么题材？这就要看看作者在社会中，熟悉和深入哪一些生活。换句话说，哪一些生活曾经牵动过作者的思想感情，感动过作者的，那就是好的、有意义的、值得一画的题材。”

(எந்தத் தலைப்புப்பொருளில் கவனம் செலுத்த வேண்டும்? எதைத் தீர்மானிப்பது என்பது ஓவியருக்கு வாழ்க்கையின் எந்த அம்சங்களைத் தெரிந்திருக்கிறது என்பதையும் அவரது சமூக ஈடுபாடுகளில் எதை ஆழமாக ஆராய்ந்தார் என்பதையும் பொறுத்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வாழ்க்கையில் அறிவார்ந்தும் உணர்ச்சி அடிப்படையிலும்நகரும் என்று ஓவியர் கண்டறிந்தவை நல்ல, அர்த்தமுள்ள,ஓவியம் வரைவதற்கு மதிப்புள்ள ஒரு கருப்பொருளாக இருக்கும்.
சுவா மியா டீ, சுவா மியா டீ கண்காட்சி, 1958/2015.

---

சிங்கப்பூரில் உள்ள இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய ஓவியர்த் தலைமுறையில் ஒரு முன்னணி நபராக சுவா மியா டீ உருவெடுத்தார். ஓவியத்துக்கு ஒரு நேரடியான நோக்கம் இருப்பதை சுவா வலியுறுத்தினார். ஓவியம் சமுதாயத்தை மேம்படுத்த முடியும் என்று

நம்பிய சுவா நிலநடுக்கோட்டுப் பகுதி ஓவியச் சங்கத்தை இணைந்து நிறுவினார். சங்கத்தின் முன்னணி நபராக, சமூக மெய்ந்நிலைவாதம் மூலம் தொழிலாளர் வர்க்க நிலைமைகளை முன்னிலைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து அவர் விரிவாக எழுதினார். தொழிலாளர்கள் போன்ற சமுதாயத்தின் புறக்கணிக்கப்பட்ட பிரிவுகளுக்கான பச்சாத்தாபத்தை வெளிப்படுத்தும் யதார்த்தமான சித்தரிப்புகள் மூலம் அவரது ஓவியம் இந்தப் பார்வையை உள்ளடக்கியது. 1974 ஆம் ஆண்டில் குழு கலைக்கப்பட்ட போதிலும், சிங்கப்பூர் பிரிட்டிஷாரிடமிருந்தும், பின்னர் மலேசியாவிடமிருந்தும் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து அடையாளத்தைத் தேடுவதோடு, சமூக மற்றும் அரசியல் கவலைகளை நிவர்த்தி செய்ய ஓவியர்கள் ஒன்றிணைந்த காலத்தை சுவாவின் படைப்பு பிரதிபலிக்கிறது.

'மலேயாவின் காவியக் கவிதை' மீது அரசியல் முக்கியத்துவம் சுமத்தப்பட் டிரு க்கிறது, இஃது ஓர் இளைஞன் தேசியவாதக் கவிதைகளை சக மாணவர்கள் குழுவுக்கு வாசிப்பதைச் சித்தரிக்கிறது. இச்செயல் புயல் மேகங்கள் திரண்டு வரும் பின்னணியின் முன் நடப்பதால், பதற்றம், வரவிருக்கும் மாற்றம் பற்றிய உணர்வை அதிகரிக்கிறது.
இதற்கிடையில், 'தேசிய மொழி வகுப்பு' மலாய் மொழி வகுப்பின் போது உள்ள ஒரு மாணவர்கள் குழுவையும் அவர்களின் ஆசிரியரையும் சித்தரிக்கிறது. கரும்பலகையில் உள்ள வார்த்தைகள், "Siapa nama kamu?" (மலாய் மொழியில், "உங்கள் பெயர் என்ன?"), மொழி எவ்வாறு அடையாளத்தை வடிவமைக்க உதவுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் அடைந்ததை அடுத்து, ஒரு 'மலேயக் கலாச்சாரத்தை' வளர்ப்பது சமூகத்தை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வழியாகக் கருதப்பட்டது.

லீ பூன் வாங் (李文苑)
(பிறப்பு 1934, சீனா; இறப்பு 2016, சிங்கப்பூர்)
பொத்தோங் பாசிர்ே பால் பண்ணைக்காரர்
1958
கித்தானில்எண்ணெய்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2014-01441

அதன் இருண்ட பின்னணி, வியக்கத்தக்க யதார்த்தமான விவரங்கள் மற்றும் தலைப்புப்பொருளின் நெருக்கமான கட்டமைப்பால், லீ பூன் வாங் தான் வரைந்த பொத்தோங் பாசிர் பால் பண்ணைக்காரர் ஓவியத்தில் அவரது தலைப்புப் பொருளின் அமைதியான கண்ணியத்தைப் பிரதிபலிக்க அழைக்கிறார், அதே நேரத்தில் உடல் மற்றும் உணர்ச்சி அடிப்படையிலான கடினத்தை அங்கீகரிக்கிறார். இந்த உருவப்படம் பணக்கார புரவலர்களுக்கு என வழக்கமாக ஒதுக்கப்பட்ட 19 ஆம்

**SG1**

| |
|---|
| நூற்றாண்டின் முற்பகுதி உருவப்படங்களின் பாணியைக் கொண்டிருக்கிறது. |
| கோஹ் சியா யோங் (许锡勇)<br>(*பிறப்பு* 1938, சிங்கப்பூர்)<br>நிலநடுக் கோட்டுப் பகுதியில் படிப்பு<br>1966<br>கித்தானில் எண்ணெய்<br><br>நிலநடுக்கோட்டுப் பகுதி ஓவியச் சங்கத்தில் உள்ள இசைக்குழு<br>1968<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2010-00391\| 2009-01620<br><br>கோஹ் சியா யோங்கின் படைப்புகள் நிலநடுக்கோட்டுப்பகுதிஓவியச் சங்கத்தின் செயல்பாடுகள் பற்றிய ஒரு பார்வையை வழங்குகின்றன. அச்சங்கத்தில்அவர் உறுப்பினராக இருந்தார். சமூகத்தைப் பிரதிபலிப்பதற்கும், உரிமையற்றவர்களை உயர்த்துவதற்கும் ஓவியத்துக்கு இருக்கும் பங்கை இந்த குழு நம்பியது, மேலும் இசை, இலக்கியம் மற்றும் நாடகத்திற்கான செயல்பாட்டுக்கென பிரிவுகள் அங்கு இருந்தன. |
| அன்னாரத்னம் குணரத்னம்<br>(*பிறப்பு* 1913, மலேசியா; *இறப்பு* 2008, சுவிட்சர்லாந்து)<br>மேவிஸ்<br>1953<br>வெண்கலம்<br>சத்னாதேவி குணரத்னம் *அவர்களின் பரிசு*<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2017-00952<br><br>தலைப்புப் பொருளின் ஆடைகளின் நுட்பமான மடிப்புகளிலிருந்து அதன் நுட்பமான வெளிப்பாட்டு கொண்ட முக அம்சங்கள் வரை *ஒவ்வொன்றிலும்* விவரங்களைக் கவனிக்கும் கூர்மையான கண்களும் அன்னரத்னம் குணரத்னத்துக்கு இருந்த வலுவான நுட்பமும் ‘மேவிஸ்’ சிற்பத்தை உயிர்ப்பிக்கின்றன. சிங்கப்பூரின் ஆரம்பகாலப் பெண் சிற்பக் கலைஞர்களில் ஒருவரான குணரத்னம், 1939 ஆம் ஆண்டில் தனது முதல் தனிக் கண்காட்சியை நடத்த மலேயாவுக்கு வருவதற்கு முன்பு சென்னை கலை மற்றும் கைவினைக் கல்லூரியில் பட்டம் பெற்றார். |
| லிம் செங் ஹோ (林清河)<br>(*பிறப்பு* 1912, சீனா; *இறப்பு* 1979, சிங்கப்பூர்)<br>சடகோபன் என்றும் அழைக்கப்படும் சிவப்புத் துண்டு<br>1960 |

| |
|---|
| காகிதத்தில் நீர் வண்ணப்பூச்சு<br><br>செறிவு<br>*வரையப்பட்ட ஆண்டு* 1955–1960<br>காகிதத்தில் வண்ணப்பசை<br><br>தடகள வீரர்<br>1953<br>காகிதத்தில் வண்ணப்பசை<br>திரு. மைக்கேல் லிம் ஹாக் அன் *அவர்களின் பரிசு*<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br><br>லிம் செங் ஹோ, அழகிய நிலப்பரப்புகளின் வெளிப்பாடுமிகு நீர்வண்ண ஓவியங்களுக்காக நன்கு அறியப்பட்டவர், ஆனால் அவர் தனது தலைப்புப்பொருள்களின் உண்மையான விவரங்களையும் நுணுக்கமான வெளிப்பாடுகளையும் வரைவதில் திறமையானவர் என்பதை அவரது உருவப்படங்கள் காட்டுகின்றன. 1960களில் சிங்கப்பூரின் துடிப்பான ஓவிய வெளியில்நீர் வண்ண ஊடகத்தின் முக்கியத்துவத்தை வரையறுப்பதில் துடிப்புடன்ஈடுபட்டவர் *என்ற முறையில்* லிம் 1969இல் சிங்கப்பூர் நீர் வண்ணச் சங்கத்தை இணைந்து நிறுவினார். 1972 ஆம் ஆண்டில் சங்கத்தின் தொடக்கக் கண்காட்சியில், சடகோபன் என்று அழைக்கப்பட்ட ஓர் இளைஞரைக் காட்சிப்படுத்திய சிவப்புத் துண்டு *ஓவியம்* காட்சிக்கு வைக்கப்பட்டது. |
| சன் யீ (沈雁)<br>(*பிறப்பு* 1919, சீனா; *இறப்பு* 2010, சிங்கப்பூர்)<br>ரோங்கெங் (மலாய் நடனம்)<br>1961<br>காகிதத்தில் மை<br><br>இந்திய நடனம்<br>1960<br>காகிதத்தில் மை<br>சிங்கப்பூர் தேசிய க் கலைக்கூடத்தின் திரட்டு<br>2014-01321\| 2014-01320<br><br>சன் யீயின் நுணுக்கமான, துல்லியமான கோடுகள் சீன எளிய வரைதல் (அல்லது பேமியாவோ, 白描) நுட்பத்தின் அடையாளமாகும். *அது* நடனக் கலைஞர்களின் திரவ இயக்கங்களை நேர்த்தியாகச் சித்தரிக்கிறது. சன் ஷாங்காய் மற்றும் டோக்கியோவில் முறையாகப் பயிற்சி பெற்றார். மை மற்றும் எண்ணெய் *மூலம்* ஓவியம் வரைதல் *என* இரண்டிலும் நிபுணராக இருந்தார். இந்தப் படைப்புத் தொகுப்பில் உள்ளூர் கலாச்சாரத்தை அவர் கொண்டாடுவது அவரது |

| |
|---|
| தத்தெடுக்கப்பட்ட வீட்டோடு *அவருக்கு இருந்த* ஆழமான ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது.<br><br>1950களில் சிங்கப்பூர் கலைக் கழகத்தை நிறுவிய சன், இரண்டு தசாப்தங்களாக அதன் தலைவராகப் பணியாற்றினார். அக்கழகம் காட்சிக் கலை, இசை, நாடகம், இலக்கியம், புகைப்படம் எடுத்தல் மற்றும் திரைப்படங்களில் சிறப்புப் பயிற்சிகளை வழங்கியது. அவரது பங்களிப்புகள் இருந்தபோதிலும், சன் ஒரு குறைவாக அறியப்பட்ட ஓவியராகவே இருக்கிறார். |
| சென் சோங் சுய் (陈宗瑞)<br>(*பிறப்பு* 1910, சீனா; *இறப்பு* 1985, சிங்கப்பூர்)<br>கதைசொல்லல்<br>1952<br>காகிதத்தில் நீர் வண்ணப்பூச்சு<br>திரு. மற்றும் திருமதி டான் வீ லீ அவர்களின் திரட்டு<br><br>ஆற்றின் அருகே துணி துவைத்தல்<br>1950<br>சீன மை மற்றும் காகிதத்தில் நிறம்<br>மறைந்த சென் சோங் சுயின் குடும்பத்தின் பரிசு<br><br>வலைகளை சரிசெய்தல்<br>1973<br>காகிதத்தில் நீர் வண்ணப்பூச்சு<br>ஓவியரின் பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>1993-01704 P-0666<br><br>**“绘画是无声的言语，画家忠实地把物象绘在画面，你看得懂，他看得懂，没有国族的别，没有阶级的分。”**<br>(ஓவியம் ஓர் அமைதியான மொழி. *ஓவியப் பரப்பில்* ஓவியர் உண்மையுடன் என்ன செய்கிறார் என்பதை அனைவரும் புரிந்துகொள்கிறார்கள்; தேசியம் அல்லது சமூக அந்தஸ்து *ஆகியவை* இதைப் புரிந்துகொள்வதற்கு தடையாக இல்லை.)<br>சென் சோங் சுவீ, தடையற்ற மை: சென் சோங் சுவீயின் எழுத்துகள், 2017.<br><br>சென் சோங் சுவீ ஒரு செல்வாக்கு மிக்க ஓவியர்மற்றும் சிங்கப்பூரின் ஆரம்பகால ஓவியக் கல்வியாளர்களில் ஒருவராக இருந்தார். ஷாங்காயில் உள்ள சின் ஹுவா நுண்கலைக் கழகத்தில் படித்த அவர் 1931 இல் சிங்கப்பூரில் குடியேறினார். சென் பல சீன மொழிப் பள்ளிகளில் கற்பித்தார் மற்றும் 1951 முதல் 1978 வரை நன்யாங் |

| |
|---|
| நுண்கலைக் கழகத்தில் நீண்ட காலம் பணியாற்றினார். தென்கிழக்கு ஆசியக் காட்சிகளுக்காகப் புகழ் பெற்ற அவர் ஓவியர்ச் சங்கங்களையும் நிறுவினார். எண்ணெய் மற்றும் நீர் வண்ண ஓவியத்தில் அவரது தேர்ச்சி அவரது நிலையான கலைப் பார்வை நிரூபித்தது.<br><br>சிங்கப்பூரின் அன்றாட வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்துடன் சென் சோங் சுவீயின் ஈடுபாட்டை இந்தப் படைப்புகள் எடுத்துக்காட்டுகின்றன. கதைசொல்லலின் வளமான நிறங்களும், சுருக்கமான கலவையும் ஒரு காட்சியை நமக்குக் காட்டுகின்றன. இஃது ஒரு காலத்தில் பிரபலமான பொழுதுபோக்கு வடிவத்தைச் சித்தரிக்கிறது. சென், பெரும்பாலும் முறைசாரா உடையால் குறிக்கப்படும், ஓர் உழைக்கும் வர்க்கக் கூட்டம் மூலம் ஈர்ப்பைத் தூண்டுகிறார். மிகவும் திறமையான ஆனால் அடிக்கடி கவனிக்கப்படாத வேலைகளை அவர் கொண்டாடுவது *என்பது* துணி துவைத்தல் முதல் மீன்பிடி வலைகளைச் சரிசெய்வது வரை மற்ற எளிமையான பணிகளை அவர் உன்னிப்பாகக் கவனிப்பதை விரிவுபடுத்துகிறது. |
| லீ சோ லிம் (李少林)<br>(*பிறப்பு* 1930, மலேசியா)<br>ஆலயத்தில் *உள்ள* பக்தர்கள்<br>1961<br>காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு<br><br>கிறிஸ்துமஸ் மாலை<br>1960<br>காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2006-00093 \| 2006-00095<br><br>யிப் சியோங் ஃபன் (叶畅芬)<br>(*பிறப்பு* 1903, ஹாங்காங்; *இறப்பு* 1989, சிங்கப்பூர்)<br>பதினொரு வாடிக்கையாளர்கள்<br>*வரையப்பட்ட ஆண்டு* 1950 கள்<br>காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு<br>2021-00255<br><br>லீ சோவ் லிம் மற்றும் யிப் செங் ஃபன் ஆகியோரின் இந்தப் புகைப்படங்கள்<br>சிங்கப்பூரில் அன்றாட வாழ்க்கையின் பன்முகத்தன்மையைப் பதிவு செய்வதிலும் விளக்குவதிலும் புகைப்படக்கலையின் முக்கியப் பங்கை வலியுறுத்து கின்றன. |

**SG1**

‘பதினொரு வாடிக்கையாளர்கள்’ படைப்பில், யிப்பின் வானிடப் பார்வை ஒரு தெரு வியாபாரியைசுற்றி வாடிக்கையாளர்கள் ஒன்றுகூடுகிற ஓர் இயங்குகிற காட்சிக்கோவையை முன்வைக்கிறது. ஒளி மற்றும் சுற்றுப்புறத்தின் மிகைப்படுத்தப்பட்ட தோற்றத்தை உருவாக்க லீ ஒளிர்வு வெளிப்பாட்டைக் கையாளுகிறார். *‘ஆலயத்தில் உள்ள பக்தர்கள்’ ஓவியத்தில், கடுமையான புகை மூட்டங்கள் தூபத்தின் உணர்வையும் வாசனையையும் தூண்டுகிறது.* ‘கிறிஸ்துமஸ் மாலை’ ஓவியத்தில் ஆன்மீக தலைப்புப் பொருளை இந்த அசாதாரண விளைவு உயர்த்துகிறது, அங்கு வழிபாட்டாளர்களால் ஏற்றப்பட்ட மெழுகுவர்த்திகள் ஒரு கனவு போன்ற தன்மையை உருவாக்குகின்றன.

**SG1**

## தொடர்புகளைத் தேடுதல்

சிங்கப்பூரைத் தங்கள் இல்லம் எனக் குறிப்பிட்டாலும், , கலைஞர்கள், தங்கள் படைப்புகளுக்கு புத்துணர்ச்சி உத்வேக ஆதாரங்களைக் கண்டுபிடிக்க அடிக்கடி பயணப்பட்டனர். அந்தப் பயணங்கள் பலருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தன. , அவர்களின் தனித்தன்மை வாய்ந்த பாணிகளின் வளர்ச்சியில், உறுதுணையாய் விளங்கின. பிற கலாச்சாரங்களுடனான இந்த ஈர்ப்பு, பிற கலாச்சாரங்களின் ஈர்ப்புக்கு சில நேரங்களில் வழிவகுத்தாலும், பத்து ஆடவர் குழு போன்ற, முறைசாரா கூட்டுக்களால், பிற நாட்டுக் கலாச்சாரங்களுடன் இணைவதற்கான ஆசையைத், தூண்டிற்று.. இது கலைஞர்களின் வளைந்து கொடுத்து இயங்கும் தன்மையை மட்டுமின்றி, மட்டுமின்றி, சிங்கப்பூர் பரந்த தென்கிழக்கு ஆசிய வட்டாரத்தில், எவ்வாறு ஆழமாக பதியப்பெற்றது என்பதையும் பிரதிபலிக்கிறது.

1960 களில், கலைஞர்கள் மீண்டும் சிங்கப்பூரின் அடையாளத்தையும் இந்த வட்டாரத்தில் அதன் இடத்தையும் ஆராய புதிய வழிகளைக் கண்டனர். அவர்கள் இன்னும் தைரியமாகமே, ,
ஊடகம், பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் வழக்கமான எல்லைகளுக்கு அப்பால் உத்வேகம் பெற்று, பரிசோதனை செய்யத் தொடங்கினர்.

சென் வென் இஹ்சி (陈文希)
(*பிறப்பு* 1906, சீனா; *இறப்பு* 1991, சிங்கப்பூர்)
பாலினிய பெண்
*வரையப்பட்ட ஆண்டு* 1953
கித்தானில்எண்ணெய்
சிங்கப்பூர் சீன உயர்நிலைப் பள்ளி இயக்குநர்கள் குழுவின் திரட்டு

இந்தப் படைப்பில், சென் வென் இஹ்சி பாலியின் கட்டடக்கலை, மக்கள் மற்றும் சடங்குகள் ஆகியவற்றின் மீதான தனது ஈர்ப்பை வெளிப்படுத்துகிறார். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து பூமியில் ஒரு சொர்க்கம் என்று பிரபலமாக அறியப்பட்ட, ஒரு தொடப்படாதபாலி *என்ற* யோசனை நவீன வாழ்க்கையிலிருந்து தப்பித்து உத்வேகம் பெற விரும்பிய ஓவியர்களின் கவனத்தை ஈர்த்தது.

1952 ஆம் ஆண்டில், சென் மற்றும் சக ஓவியர்களான லியு காங், சென் சோங் சுவீ மற்றும் சியோங் சூ பியெங் ஆகியோர் தங்கள் கற்பனையைத் தூண்டக்கூடிய கவர்ச்சியான மற்றும் அறிமுகமில்லாத காட்சிகளைத் தேடி இந்தோனேசியாவுக்குச் சென்றனர். இந்த நெருக்கமான கலவையில், பெண்ணையும் செதுக்கப்பட்ட கல் பாதுகாவலரையும் (அல்லது பெடோகல்)

**SG1**

| |
|---|
| பக்கவாட்டாக வைப்பதன் மூலம், ஆன்மீகமும் சடங்குகளும் பாலியில் வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்று சென் கூறுகிறார். |
| சியோங் சூ பியெங் (钟泗宾)<br>(*பிறப்பு* 1917, சீனா; *இறப்பு* 1983, சிங்கப்பூர்)<br>பாலினியக் கன்னிகைகள்<br>1954<br>பலகையில் *ஒளிபுகா நீர்வண்ணம்* (குவாஷே)<br>ஆஞ்சி மற்றும் ஓங் யூ ஹுவாட் ஆகியோரின் திரட்டு<br><br>இந்த ஓவியத்தில் உள்ள தோல் நிறங்களைச் சித்தரிக்க ஆரஞ்சு மற்றும் கறுப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தியிருப்பது சியோங் யதார்த்தத்தின் துல்லியத்தைக் காட்டிலும் கலை வெளிப்பாட்டுக்கு முன்னுரிமை அளித்ததை எடுத்துக்காட்டுகிறது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் இந்தக் கலவையின் வெவ்வேறு பதிப்புகளை உருவாக்கியுள்ளார், இதில் இரண்டு பெண்கள் நீளமான கால்கள் மற்றும் தட்டையான சுயவிவரங்கள் ஆகியவை வயங் குலிட் (நிழல் பொம்மைகள்) வடிவத்தைக் குறிக்கின்றன. தென்கிழக்கு ஆசியாவின் கலாச்சாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவரது தனிப்பாணி சுருக்கவோவியம் ஆனது. |
| லியு காங் (刘抗)<br>(*பிறப்பு* 1911, சீனா; *இறப்பு* 2004, சிங்கப்பூர்)<br>பாட்டிக் தொழிலாளர்கள்<br>1954<br>கித்தானில்எண்ணெய்<br>லோக் வான் தோவின் பரிசு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>P-0197<br><br>1952 ஆம் ஆண்டில், லியு காங் தனது சக ஓவியர்களான செங் சூ பியெங், சென் சோங் சுவீ மற்றும் சென் வென் இஹ்சியுடன் இந்தோனேசியா வழியாகப் பயணம் செய்து *அத்*தீவுக்கூட்டத்தின் பல்வேறு மக்களையும் கலாச்சாரங்களையும் பற்றி அறிந்து கொண்டார். பயணத்தின் போது, அவர்கள் ஜகார்த்தாவில் உள்ள ஒரு பாட்டிக் தொழிற்சாலைக்குச் சென்றனர், அங்கு லியு பல ஆய்வுகள் மற்றும் மாதிரிக்கோடுகளை உருவாக்கினார், அவை இந்த ஓவியத்தின் அடிப்படையாக அமைந்தன. |
| லியு காங் (刘抗)<br>(*பிறப்பு* 1911, சீனா; *இறப்பு* 2004, சிங்கப்பூர்)<br>ஓவியரும்மாடலும்<br>1954<br>கித்தானில்எண்ணெய்<br>ஷெல் குழும நிறுவனங்கள், சிங்கப்பூர் *வழங்கிய* பரிசு,<br>சிங்கப்பூர் தேசிய*க்* கலைக்கூடத் திரட்டு |

**SG1**

P-1070

இந்த ஓவியத்தில், லியு காங் தனது சக ஓவியர் சென் வென் இஹ்சியை இந்தோனேசியாவில் இருந்தபோது மாதிரியாக நிற்கவைத்து வரைந்து காட்டுகிறார். ஓரளவு ஆடையை அணிந்திருக்கும் பெண்ணும், *கூர்ந்து* பார்வையிடும் ஓவியரும் இணைந்து அமைந்திருக்கும் இந்த நிதானமான, கட்டுப்படுத்தப்பட்ட சூழல், ஓவியப்படைப்பின் செயல்முறையைக் கருத்தில் கொள்ள ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

இருப்பினும், இந்த ஓவியம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பது பற்றியும் கேள்விகள் எழுகின்றன. *தலைப்புப்பொருள்கள் எவ்வாறு மேடையேற்றப்பட்டன, அவற்றின் சித்தரிப்பில் அவர்களுக்கு ஏதேனும் கருத்து இருக்கிறதா?* ஓவியரின் பார்வை மற்றும் விளக்கத்தால் ஓவியப் படைப்புகள் எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றன?

சென் செங் மெய் (陈城梅)
(*பிறப்பு* 1927, சிங்கப்பூர்; *இறப்பு* 2020, சிங்கப்பூர்)
மீன்பிடி வலைகளைச் சரிசெய்தல்
1960
கித்தானில்எண்ணெய்
ஒரு பெயர்குறிப்பிடாதநன்கொடையாளரின் பரிசு

அங்கோர் வாட் விவரம் II
1962
கித்தானில் எண்ணெய்

ஓவியரின் பரிசு

சந்தைக் காட்சி, இலங்கை
1975
கித்தானில் எண்ணெய்

பாலினியச்சிறுமி
1962
கித்தானில்எண்ணெய்
ஒரு பெயர்குறிப்பிடாதநன்கொடையாளரின் பரிசு

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2008-06715 | 2008-06613 | 2021-00004 | 2008-06702

“ஓவியப் படைப்புகளில் அழகைக் கொண்டுவர வேண்டும் எனில்
நிறங்கள் மற்றும் நிழல்கள் பற்றிய அறிவு அவசியம்
நல்ல கோடுகளை வரைவதற்கு மாதிரி வரைதலிலும் மற்றும்
கையெழுது எழிலெழுத்திலும் அதிக பயிற்சி தேவை. ”

SG1

| |
|---|
| சென் செங் மேய், “எக்ஸ்பிரசிங் லைஃப், ” லாஸ்டிங் இம்ப்ரெஷன்ஸ், 2004.<br><br>நன்யாங் *நுண்*கலைக் கழகத்தில்பயிற்சி பெற்ற சென் செங் மெய், பத்து ஆண்கள் குழுவின் ஓர் *ஒருங்கிணைந்த* உறுப்பினர். அக்காலத்தில் பெண்களைப் பற்றிய சமூக எதிர்பார்ப்புகளை மீறி, மெக்சிகோ, பப்புவா நியூ கினியா மற்றும் கென்யா போன்ற இடங்களுக்குத் தனியாகப் பயணம் செய்தார். அவரது பயணங்கள் அவரது படைப்புகளில் பல்வேறு தலைப்புப்பொருள்கள் மற்றும் கருப்பொருள்கள் மற்றும் வண்ணங்களின் விளையாட்டுத்தனமான ஆய்வுக்கு வழிவகுத்தன.<br><br>சென் தனது படைப்புகளில் இழையமைப்பு மற்றும் பரிமாணத்தை உருவாக்க பல்வேறு வகையான பொருட்களைப் பயன்படுத்தினார். சுத்தமான வடிவங்கள் மற்றும் வண்ணங்களின் தனித்துவமான பிரிவுகளில் அவரது ஆர்வம், ஒரு அச்சு-உருவாக்குநராகஅவரது திறமைகளைப் பிரதிபலிக்கிறது, இது *அவர்* 1969 இல் பாரிஸில் உள்ள செல்வாக்குமிக்க அட்டெலியர் 17 பள்ளியில்பெற்றது.<br><br>தென்கிழக்கு ஆசியா முழுவதும் அவர் மேற்கொண்ட பயணங்களின் அடிப்படையில், சென்னின் இந்த ஓவியங்கள், அவர் சந்தித்த மக்கள் மற்றும் இடங்களின் துடிப்பான ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. அவர் சந்தித்த உலக கலாச்சாரங்களின் பொருள் மற்றும் கலாச்சாரச் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதிலும் சிறப்புக் கவனம் செலுத்தினார்.<br><br>சந்தைக் காட்சி, இலங்கை அன்றாட வாழ்வின் சாரத்தை வெளிப்படுத்துவதில் அவரதுதிறமையைக் காட்டுகிறது. சென் நடுவிலுள்ள மனிதர்களையும்அவர்களின் கூடைகளையும் சித்தரிக்க சூடான பழுப்பு மற்றும் தங்க மஞ்சள் நிறங்களைப் பயன்படுத்துகிறார், அவை வெளிர் நீல பின்னணிக்கு மாறாக நிற்கின்றன. |
| யே சி வெய் (叶之威)<br>(*பிறப்பு* 1913, சீனா; *இறப்பு* 1981, மலேசியா)<br>பெயரிடப்படாதது (கோழிச் சண்டை)<br>தேதியற்றது<br>கித்தானில் எண்ணெய்<br><br>அங்கோரின் மார்பளவுச் சிற்பம்<br>1963<br>கித்தானில்எண்ணெய்<br>லோக் வான் தோவின் பரிசு |

SG1

தோபா ஏரி
*வரையப்பட்ட ஆண்டு* 1970
கித்தானில்எண்ணெய்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
P-0752 | P-0185 | 2000-00128

யே சி வெய்1925 ஆம் ஆண்டில் ஓவியத்தைத் தொடர வேண்டி சீனாவுக்குத் திரும்புவதற்கு முன்னர். தனது குழந்தைப் பருவத்தை மலேசிய மாநிலமான சரவாக்கில் உள்ள சிபுவில் கழித்தார்.
பத்து ஆண்கள் குழுவின் தலைவராக யே கருதப்படுகிறார், இஃது ஓவியர்களின் முறைசாராக் குழுவாகும், அவர்கள் 1960 களில் தென்கிழக்கு ஆசியா முழுவதும் பயணங்களை ஏற்பாடு செய்தனர். . இந்தப் பயணங்களின் போது, அவர்கள் உள்ளூர் சமூகங்களின் கட்டடக்கலை, சுற்றுச்சூழல் மற்றும் அன்றாட வாழ்க்கையை வரைந்து கவனித்தனர். தென்கிழக்கு ஆசியாவின் பல்வேறு கலாச்சாரங்களை தங்கள் படைப்புகளில் ஆராய்வதன் மூலம் ஓவியர்கள் பிராந்தியத்திற்குள் ஒரு பகிரப்பட்ட அடையாளத்தை வளர்க்க முடியும் என்று நம்பியதன் காரணமாக, 1970 ஆம் ஆண்டில் தென்கிழக்கு ஆசிய ஓவியச்சங்கத்தை யே நிறுவினார்.

1960 களிலும் 1970 களின் முற்பகுதியிலும் யேவின் படைப்புகள் அதிக கவனத்தைப் பெறத் தொடங்கின. இருந்தபோதிலும், 1970 களின் பிற்பகுதியில், யே ஓவியஅரங்கத்திலிருந்து பின்வாங்கி மலேசியாவுக்குச் சென்றார், அங்கு அவர் 1981 இல் காலமானார்.

தென்கிழக்கு ஆசியாவின் பொருள் கலாச்சாரத்தின் தீவிர பார்வையாளராகவும், தனது பயணங்களில் இருந்து பல்வேறு பொருட்களைச் சேகரிப்பவராகவும், யே சி வெய் தனது படைப்புகளில் பழங்குடித் துணிகள் மற்றும் செதுக்கல்களிலிருந்து கூறுகளை இணைத்தார்.
காலமற்ற தன்மை மற்றும் ஆழமான வரலாறு ஆகியவற்றின் உணர்வைத் தூண்டும் இந்த அணுகுமுறைகள், இப்பகுதியின் பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் பரந்த கலாச்சாரங்கள் மீதான ஈர்ப்பை வெளிப்படுத்த யேவை அனுமதித்தன.

இந்தத் தனித்துவமான விரிந்தகன்ற பார்வை வடிவத்தில் பெரிய நிலப்பரப்புகளைக் காட்சிப்படுத்தும்  அவருடையதிறனை யேவி ன் ‘டோபா ஏரி’ காட்டுகிறது. அவர் நிலப்பரப்பை ஒன்றுடன் ஒன்று அடுக்கிய வடிவங்கள் மற்றும் வண்ணங்கள் மூலம் வரையறுக்கிறார், நிலப்பரப்பின் நிலத்தமைப்பு வரையறைகளைத் தெளிவாக வெளிப்படுத்துகிறார்.

லிம் இட்சே பெங் (林子平)

**SG1**

(*பிறப்பு* 1921, சிங்கப்பூர்; *இறப்பு* 2025, சிங்கப்பூர்)
பாறைகள் நிறைந்த நிலப்பரப்பு
c. 1950கள்–1960கள்
கித்தானில்எண்ணெய்
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
1999-00009

அவரது வெளிப்பாடுமிகுந்தமற்றும் நுணுக்கமான விவரங்கள் கொண்டமை ஓவியங்களுக்காகப் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட நூற்றாண்டு ஓவியரான லிம் இட்சே பெங் 1950 மற்றும் 1960 களின் முற்பகுதியில் எண்ணெய் ஓவியத்தின் ஊடகததையும்ஆய்வு செய்தார். இங்கே, அவர் பாறை அமைப்புகளின் கவர்ச்சிகரமான இருப்பைப் *படம்* பிடிக்கிறார். பல்வேறு பாறைகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் ஒரே ஒரு பாரிய கட்டமைப்பை லிம் உருவாக்குகிறார். இந்தக் கலவைத் தேர்வு நிலப்பரப்பின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது.

லிம் 1960 மற்றும் 1970 களில் ‘பத்து ஆண்கள் குழு’ என்ற முறைசாரா ஓவியர் குழுவுடன் பல பிராந்தியப் பயணங்களில் இணைந்தார், எண்ணெய் மற்றும் மை இரண்டிலும் படைப்புகளைத் தயாரித்தார், அவை அவரது அவதானிப்புகள் மற்றும் அனுபவங்களை பிரதிபலித்தன.

---

லீ மான் ஃபோங் (李曼峰)
(*பிறப்பு* 1913, சீனா; *இறப்பு* 1988, இந்தோனேசியா)
பெலுகிஸ் மெலுகிஸ்
1957
பலகையில்எண்ணெய்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
2005-01288

款式：一九五七年十月，偕独峰、德贵、曼雄又作峇里游，寫画中人作悬崖古奇 曼峰

குறிப்பு வாசகம்:
1957 அக்டோபரில், நான் மீண்டும் பாலிக்கு டூஃபெங், டெகுய் மற்றும் மான்சியோங் ஆகியோருடன் பயணம் செய்தேன், மேலும், பண்டைய மற்றும் அற்புதமான பாறைகளை வரைந்தவர்களை *ஓவியத்தில்* சித்தரித்தேன். மான் ஃபோங்.

---

லாய் ஃபூங் மோய் (赖凤美)
(*பிறப்பு* 1931, மலேசியா; *இறப்பு* 1995, சிங்கப்பூர்)
[தலைப்பு இல்லை] (மீன்பிடி கிராமம்)
1961

**SG1**

கித்தானில்எண்ணெய்
தனியார் திரட்டு

இந்த விரிவான படைப்புலாய் ஃபூங் மோயின் நம்பிக்கையான வண்ணப் பயன்பா டு.
மற்றும் தலைப்புப்பொருள்களின் சாரத்தை வெளிப்படுத்த வடிவத்தை எளிமைப்படுத்தும் அவரது திறன் ஆகிய தனிச்சிறப்பியல்புகளைக் கொண்டது. இது 1961 ஆம் ஆண்டில் பத்து ஆண்கள் குழுவுடன் மலேசியாவுக்கு அவர் மேற்கொண்ட பயணத்திற்குப் பிறகு வரையப்பட்டது. சிங்கப்பூரில் உள்ள நன்யாங் நுண்கலைக் கழகம் மற்றும் பாரிஸில் உள்ள மதிப்புமிக்க தேசிய நுண்கலைப் பள்ளியில் பயிற்சி பெற்ற லாய், 1954 இல் சிங்கப்பூருக்குத் திரும்பினார், அங்கு அவர் அன்றாட வாழ்க்கையின் காட்சிகளை சித்தரிப்பதில் தனது ஓவியச் செய்முறையைஅர்ப்பணித்தார்.

ஷூ ய் திட் சிங் (许铁生)
(*பிறப்பு* 1914, சீனா; *இறப்பு* 1997, சிங்கப்பூர்)
லாங்ஹவுஸ்
1980
தேக்கு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
ASB-0035

ஷூ ய் திட் சிங் 1960 கள் மற்றும் 1970 களில் 'பத்து ஆண்கள் குழு' என்ற முறைசாரா ஓவியர் குழுவுடன் பல பிராந்தியப் பயணங்களில் இருந்தார். தென்கிழக்கு ஆசியாவில் கிராமப்புற வாழ்க்கையின் எளிமை மற்றும் சமூக அமைப்பு மீதான அவரது ஏக்க நினைவு அவரது விருப்பமான ஊடகமான 'தேக்கு' சிற்பத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது போன்று, இந்த அனுபவங்கள் அவரது நடைமுறையில் பெரும்பகுதியை வடிவமைத்தன.

லாங்ஹவுஸின் சிக்கலான விவரங்கள் பார்வையாளர்களை கிராம வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை ஆராய அழைக்கின்றன. செங்குத்து மற்றும் கிடைமட்டத் தளங்களைப் பயன்படுத்தி ஆழத்தையும் இயக்க உணர்வையும் உருவாக்குவதன் மூலம் ஷூ ய் விளையாட்டுத் தனத்தையும் சிந்தனைத் தனத்தையும் சமநிலைப்படுத்துகிறார்,. திடமான மரத்தின் உள்ளே கவனமாக திறப்புகளைச் செதுக்குவதன் மூலம், அவர் பொருளின் எடை மற்றும் இலகுவான உணர்வு ஆகியவற்றுக்கு இடையே ஓர் இணக்கமான தொடர்பைக் கொண்டுவருகிறார்.

யான் ஃபூக் லூயன் (甄福暖)
(*பிறப்பு* ஆண்டுதெரியவில்லை; *இறப்பு* ஆண்டுதெரியவில்லை, சிங்கப்பூர்)

வசந்தத்தின் விடியல்
1955
காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு
யான் ஃபூக் லூயன் நினைவாக லீ சோ லிம் வழங்கிய பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு காட்சியகத்தின்
2018-01088

இந்தப் புகைப்படங்கள் சித்திரவாதத்தின் செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றன. இஃது ஒரு புகைப்பட இயக்கமாகும், இது யதார்த்தத்தின் ஆவணப்படுத்தல் மீது அழகியல் விளைவை வலியுறுத்தியது. 1950 களில் சிங்கப்பூரில் சித்திரவாதக்கருத்துகள் பிரபலமடைந்தன, இது புகைப்படத்தை ஒரு பதிவுக் கருவியாகப் பயன்படுத்துவதற்கு ஒரு மாற்றீட்டை வழங்கியது. இவற்றில் சில படைப்புகள் சீன ஓவியத்தில் இருந்து செங்குத்து தளவமைப்புகள் மற்றும் எதிர்மறை இடத்தைப் பயன்படுத்துதல் போன்ற கூறுகளை ஒருங்கிணைக்கின்றன. *தலைப்புப்பொருள்களின்* இந்தக் கவனமான அரங்கேற்றங்கள், கலவை மற்றும் சட்டகத்திலடைத்தல் சிங்கப்பூரின் காவியக் காட்சிகளை உருவாக்குகின்றன..

---

லீ லிம் (李林)
(*பிறப்பு* 1931, சீனா; *இறப்பு* 1989, சிங்கப்பூர்)
காலை வேலைகள் 《黎明即起灑扫》
*வரையப்பட்ட ஆண்டு* 1970
காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு

款式：黎明即起灑扫 乙酉年夏 李林

குறிப்பு வாசகம்: விடியற்காலையில் எழுந்து சுத்தம் செய்து துடைக்கவேண்டும். ஆண்டின் கோடை, yiyou. லீ லிம்.

நதிக் கரையில் காலை 《沙池》

தேதியற்றது
காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு

款式:沙池的早晨 摄於星岛 李林

குறிப்பு வாசகம்: மணல் குவியலில் காலை, சிங்கப்பூரில் எடுக்கப்பட்டது. லீ லிம்.

ஓவியர் குடும்பத்தின் திரட்டு

---

சியோங்சூ பியெங் (钟泗宾)
(*பிறப்பு* 1917, சீனா; *இறப்பு* 1983, சிங்கப்பூர்)
கருவாடுஉலர்த்தல்

1978
சீன மை மற்றும் பட்டு மீது நீர்வண்ணங்கள்
டிரான்ஸ் ஐலண்ட் பஸ் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் பரிசு.
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
1991-00343

இந்தக் காட்சியைச் சித்தரிப்பதற்காக, இந்தப் படைப்பில் மை மற்றும் நீர் வண்ணப்பூச்சின் நீர்த்தலை சியோங் சூ பியெங் நிபுணத்துவமாகக் கட்டுப்படுத்தினார். நுணுக்கமான கோடுகள் மற்றும் அடர்த்தியான இலைகள் பாரம்பரிய சீன மை ஓவியத்தின் பாணியைத் தூண்டுகின்றன, அதே நேரத்தில் *தலைப்புப்* பொருள் தென்கிழக்கு ஆசியத்தைச் சார்ந்தது.

இந்தப் படைப்பு சிங்கப்பூரின் $50வங்கித்தாளின் பின்புறத்தில் இடம்பெற்றுள்ளது.

---

சென் வென் இஹ்சி (陈文希)
(*பிறப்பு* 1906, சீனா; *இறப்பு* 1991, சிங்கப்பூர்)
கொடிகளுக்கு நடுவே இரண்டு கிப்பன்கள் கிபான்
1980 களில்
சீன மை மற்றும் காகிதத்தில் நிறம்
டாக்டர். ஏர்ல் லூவின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
1993-00989

இந்த ஓவியத்தில் கிப்பன்களை உயிரோடிருப்பதுபோன்றுசித்தரிப்பதற்கு, சென் வென் ஹ்சி தனது வீட்டுத் தோட்டத்தில் வைத்திருந்த கிப்பன்களை நெருக்கமாகப் படித்தார். ஓவியத்தில் உள்ள குறிப்பு வாசகம்கிப்பான்ஸின் இயக்கங்களை நேர்த்தியான சீன கையெழு எழிலெழுத்துகளின் தூரிகைவீச்சுகளுடன் ஒப்பிடுகிறது.

இந்தப் படைப்பு சிங்கப்பூரின் $50 வங்கித்தாளின் பின்புறத்தில் இடம்பெற்றுள்ளது.

---

சென் வென் இஹ்சி (陈文希)
(*பிறப்பு* 1906, சீனா; *இறப்பு* 1991, சிங்கப்பூர்)
அன்னங்கள் 1987
சீன மை மற்றும் காகிதத்தில் நிறம்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு சேகரிப்பு
P-1056

சென் வென் இஹ்சியின் திரவத் தூரிகைவீச்சுகளுடன், ஓர் அன்னங்களின் குழு எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்களாக வடிகட்டப்பட் டு , நிற அடுக்குகளால் வேறுபடுத்தப்படுகின்றன.

SG1

அவற்றின் வடிவங்கள் அவை விண்வெளியில் தொங்கவிடப்பட்டவை போல ஒன்றுக்கொன்று தள்ளுவதைப் போல தோன்றுகி ன்றன.

தாளின் வெள்ளைப் பின்னணியால் இது வலியுறுத்தப்படுகிறது, இது வேண்டுமென்றே காலியாக விடப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை சீன மை ஓவியத்தில் லியுபாய் (留白) என்று அழைக்கப்படும் ஒரு கருத்தாகும், இதன் பொருள் " விடப்பட்ட வெள்ளை " என்பதாகும்.

款式:文希南洋作

குறிப்பு வாசகம்: வென் இஹ்சியின் நன்யாங் ஓவியம்

சென் வென் இஹ்சி (陈文希)
(*பிறப்பு* 1906, சீனா; *இறப்பு* 1991, சிங்கப்பூர்)
கிப்பான்ஸ்
1977
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் திரட்டு
2015-00455

இந்த ஓவியப்படைப்பின் பாதுகாப்புக்கு, பாங்க் ஆப் அமெரிக்கா ஓவியப் பாதுகாப்புத் திட்டத்தால் தாராளமாக நிதியளிக்கப்பட்டது.

பல்வேறு தலைப்புகளில் *வரையப்பட்ட* சென் வென் இஹ்சியின் பல படைப்புகளில், அவரது கிப்பான் ஓவியங்கள் மிகவும் பிரபலமானவை. கிப்பான்ஸ் என்பது சென் உருவாக்கிய மிகப்பெரிய மை ஓவியமாகும், மேலும் மத்திய வருங்கால வைப்பு நிதியத்தால் 79 ராபின்சன் சாலையில் அதன் புதிய கட்டடத்தை திறந்து வைப்பதற்காக வரையப் பணிக்கப்பட்டது., அந்தக் கட்டடமேசிங்கப்பூரில் ஆகஉயரமான கட்டடமாக இருந்தது. ஒரு மரத்தின் கிளைகளுக்கிடையில் விளையாடும் ஒரு பெரிய கிப்பான்கள் குழுவைச் சித்தரிக்கும் இந்தப் படைப்பு ஒரு வியத்தகு பாறை முகத்தின் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது. சென் துணிச்சலாக கித்தானின்பெரிய பகுதிகளை காலியாக விட்டுவிட்டார், எதிர்மறை இடம் சமநிலையையும் ஒரு பரபரப்பான கலவைக்கு இடத்தையும் வழங்குகிறது.

"我所画的东西并不单独描写物体， 还要有'空气'在里面。"
“நான் வரைவது வெறும் சித்தரிப்புக்கு அப்பாற்பட்டது. அதில் உணர்வு இருக்க வேண்டும். ”
சென் வென் இஹ்சி, CONVERGENCES: சென் வென் இஹ்சி நூற்றாண்டுக் கண்காட்சி, 2006.

**SG1**

1949 ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்குச் செல்வதற்கு முன்பு சென் வென் இஹ்சி சீனாவில் ஓவியப் படிப்பை மேற்கொண்டார். சென்னின் ஓவியவரம்புகள் பிரதிநிதித்துவப் பாணி மற்றும் எளியபாணிகள் இரண்டையும் உள்ளடக்கியது. மேலும், எண்ணெய், மை மற்றும் மணல் மற்றும் அரக்கு உள்ளிட்ட பல பரந்த அளவிலான பொருட்களைக் கொண்டிருந்தது.

அவரது ஆற்றல்மிக்க கிப்பான்ஸ் மற்றும் விலங்குகள் ஓவியங்கள் அவரது மிகவும் தனித்துவமான மற்றும் புகழ்பெற்ற படைப்புகளாக மாறியது, மேலும் அவை சீன ஓவியத்தின் தடிமனான, வெளிப்படையான லிங்னன் பாணியால் பாதிக்கப்பட்டன.

சீன உயர்நிலைப் பள்ளி மற்றும் நன்யாங் நுண்கலைக் கழகம்போன்ற பல்வேறு நிறுவனங்களில் சென் ஓவியம்கற்பித்தார். 1968 ஆம் ஆண்டில் ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, அவர் தனது ஓவியத்தில்மட்டுமே கவனம் செலுத்தினார். அவரது வாழ்நாள்முழுவதும் அவரது படைப்புகள் தொடர்ந்து உருவாகின. 1991 ஆம் ஆண்டில் அவர் மறைந்த பிறகும் கூட, சென்னின் கலை பலருக்கு உத்வேகம் அளிப்பதாகவே உள்ளது.